
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI




2023 டிசம்பர் 1-15 தொகுதி 22 இதழ் 8 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

## டிசம்பர் 10: தோழர் என்கேவின் புரட்சிகர வாழ்க்கை மரபை முன்னெடுத்துச் செல்வோம்!!



## ஆறு முதல் கடல் வரை பாலஸ்தீனம் விடுதலை பெற வேண்டும்!!



# தோழர் என்கேவின் புரட்சிகர வாழ்க்கை மரபை முன்னெடுத்துச் செல்வோம்; பாசிச எதிர்ப்பு புரட்சிகர அரசியல் சக்தியாக இகக(மாலெ)வை வலுப்படுத்த உறுதியேற்போம்!



"மக்கள் நலனே கட்சியின் நலன்" என்ற மாபெரும் புரட்சிகர மரபை வாழ்க்கையாக ஏற்றுக் கொண்டவர் தோழர் என் கே.நடராசன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)ன் தலைமறைவு புரட்சிகர ஊழியராக, கிராமப்புர ஆதிக்க நிலவுடமை சக்திகளுக்கு எதிரான அச்சமற்ற போராளியாக, பெருமுதலாளித்துவ தொழிலாளர் விரோத ஈவிரக்கமற்ற அடக்குமுறைக்கு சற்றும் அஞ்சாத தொழிலாளர் தலைவராக, புரட்சிகர சமூக மறுமலர்ச்சியின் உந்துவிசையான இகக(மாலெ) வின் மாநிலச் செயலாளராக கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக, தளராத புரட்சிகர பயணத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தோழர் என் கே.

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி, இகக(மாலெ) காலூன்றிய திண்டுக்கல் மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த தோழர் என்கே, திண்டுக்கல் மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போது, டிசம்பர் 10, 2022ல் நம்மை விட்டுப் பிரிந்தார். ஆர்எஸ்எஸ், பாஜக தலைமையிலான கார்ப்பரேட் காவிப்பாசிச கொடுங்கோன்மை கோலோச்சிய 2018ல் கட்சியின் மாநிலச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட என்கே, பாசிசத்திற்கெதிரான சளைக்காத களப் போராளியாக விளங்கினார். இடதுசாரி, ஜனநாயக சக்திகளை பாசிச எதிர்ப்பில் அணிதிரட்டி, தஞ்சை பாசிச எதிர்ப்பு மாநாட்டை பெருவெற்றி பெறச் செய்தார். பாசிசத்திற்கு எதிரான உருக்கு நிகர் கட்சியாக இகக(மாலெ)வை வலுப்படுத்தும் திசையில் கட்சியின் 11ஆவது மாநில மாநாட்டை திருச்சியில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். இரண்டாவது முறையாக செயலாளராக தேர்வு பெற்றார்.

பாசிச எதிர்ப்பில் இடதுசாரி ஒற்றுமையின் அவசியத்தை உயர்த்திப்பிடித்த என் கே, புரட்சிகர கம்யூனிஸ்ட் அரசியலை நோக்கி ஈர்க்கப்பட்ட இடது செயல்வீரர்களை அணிதிரட்டுவதிலும் ஊக்கமிக்க பங்கு வகித்தார். புரட்சிகர இயக்கத்தை சமூக மயமாக்குவதற்காக, பெண்கள், இளைஞர், மாணவர் சமூகத்தை புரட்சிகர அரசியலுக்கு ஈர்த்திட அரும்பாடுபட்டார் தோழர் என்கே. பகத்சிங், பெரியார், சிங்காரவேலர், அம்பேத்கர், வினோத் மிஸ்ரா உள்ளிட்ட முற்போக்கு, புரட்சிகர ஆளுமை களின் கொள்கைகளை புதிய தலைமுறை சக்திக ளிடம் கொண்டு சேர்ப்பதன் அவசியத்தை எப்போதும் வலியுறுத்தி வந்தார் தோழர் என் கே.

தலித், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் மீது தொடரும் வன்கொடுமைகள், ஏற்றத்தாழ்வு களுக்கு எதிராக ஆட்சியாளர்களை எதிர்த்து களமாடும் கட்சியாக மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியை வழிநடத்துவதில் தீவிரக் கவனம் செலுத் தினார்.

ஏறத்தாழ அரைநூற்றாண்டு கால அவரது வாழ்வும் பணியும் நமக்கு விட்டுச் சென்றது; 'மக்கள் நலனும் கட்சியின் நலனுமே' புரட்சியாளர்களின் வாழ்க்கை லட்சியம் எனும் கொள்கை உறுதிப்பாடு. அந்த உறுதிப்பாட்டின் காரணமாகவே தோழர்கள் அப்பு, மச்சக்காளை, சந்திரசேகர், சந்திரகுமார், சுப்பு உள்ளிட்ட தியாகிகளின் கனவை நனவாக்கும் பயணத்தில் தனது இறுதி மூச்சு வரை இடைவிடாது களமாடினார்.

புதிய ஜனநாயக இந்தியா எனும் கனவை ஈடேற்ற, அதை நோக்கிய பயணத்தில், தடை அரணாக இருக்கும் பாசிசத்தை வேரறுக்க தோழர் என் கே பெயரால் உறுதி ஏற்போம்!

இகக(மாலெ)வை மிகப்பெரிய புரட்சிகர மக்கள் கட்சியாக வளர்க்கும் தோழர் என் கே வின் கனவை ஈடேற்ற உறுதி ஏற்போம்!! ❑

2023 டிசம்பர் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 8

உள்ளே

மோகன் பகவத்தின் சூழ்ச்சியுரை 5
கட்சி ஆவணம்-பொதுத் திட்டம்-இந்திய அரசு 7
தலித்துகள் மீது தொடரும் வன்முறைகள் 9
திண்ணைச் சில்லுகள் 16

**முதன்மை ஆசிரியர்**
**வீ.சங்கர்**

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# முதுபெரும் கம்யூனிஸ்ட் தோழர் என்.சங்கரய்யா அவர்களுக்கு செவ்வணக்கம்!

முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பிற்குரிய தலைவருமான தோழர் என்.சங்கரய்யா அவர்கள் தனது 102வது வயதில் காலமானார். தோழர் என்.சங்கரய்யா அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 1922ல் பிறந்தார். 8ம் வகுப்பு வரை தூத்துக்குடியில் படித்து பின்னர் மதுரையில் தனது படிப்பைத் தொடர்ந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு சுயமரியாதை இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது. அமெரிக்கன் கல்லூரியின் மாணவர் தலைவராகச் செயல்பட்டார். பின்னர் ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதிலும் அடக்குமுறை காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை கட்டி எழுப்புவதற்கும் எட்டு ஆண்டு கால சிறைவாசம், மூன்று ஆண்டு காலம் தலைமறைவு வாழ்க்கை ஆகியவற்றை சந்தித்தார் தோழர் என்.சங்கரய்யா அவர்கள். மதுரையை மய்யமாகக் கொண்டு ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாணவர் இயக்கப் பணிகள் துவங்கி, மதுரை மாவட்ட கட்சி அமைப்பாளராக, நூற்பாலைத் தொழிற் சங்க இயக்கத்தின் வழிகாட்டியாகச் செயல்பட்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றிய பிறகு அதன் முக்கிய தலைவர்களில் ஒருவராக, AIKS விவசாயிகள் சங்கத்தின் தேசிய தலைவராகச் செயல்பட்ட அவர் தீக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர், கட்டுப்பாட்டு ஆணையத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்தார்; தமிழ்நாடு சிபிஐஎம் கட்சியின் மாநிலச் செயலாளராக திறம்பட செயலாற்றிய தோழர். என்.சங்கரய்யா அவர்கள், 'தொழிலாளர் வர்க்க இயக்கமும் விவசாயிகள் இயக்கமும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை' வலியுறுத்தி அதற்கான பாதையை உருவாக்கித் தந்தவர் ஆவார். அவரது இழப்பு கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இந்திய உழைக்கும் மக்களும் பேரிழப்பாகும்.


சுதந்திரப் போராட்டத்திலும் புரட்சிகர சமூக மாற்றத்திலும் சிறப்பான பங்கு வகித்த அவருக்கு, கவுரவ டாக்டர் பட்டம் அளிக்க தமிழ்நாடு ஆளுநர் மறுத்தது எவ்விதத்திலும் தோழர் சங்கரய்யா அவர்களின் தியாகத்தையும் புகழையும் குறைத்துவிடவில்லை; குறைத்துவிடவும் முடியாது. இன்னும் சொல்லப்போனால், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்காத, ஆங்கிலேயர்களின் அடிமைகளாகச் செயல்பட்ட ஆர்எஸ்எஸ்ஸின் வாரிசான ஆளுநர், தோழர் சங்கரய்யா அவர்களுக்கு டாக்டர் பட்டத்திற்கு அனுமதி யளிப்பது என்பதுகூட தேவையுமில்லை. இத்தகைய அரசியல் மனமாச்சரியங்களை அடித்து நொறுக்கியே இடது இயக்கத்தின் பேராளுமையாக எழுந்தவர் தோழர் சங்கரய்யா. தமிழ்நாடு வரலாற்றிலும் மக்கள் மத்தியிலும் மறக்க முடியாத இடத்தைப்பெற்றுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மாநிலக் கமிட்டி, தோழர் சங்கரய்யாவின் மறைவுக்கு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது. அவரது பேரிழப்பால் துயருறும் மார்க்சிஸ்ட் கட்சி தோழர்கள், குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது. ❑

# தோழர் என்.சங்கரய்யா அவர்களுக்கு சிபிஐஎம்எல் கட்சியின் அஞ்சலி

சென்னையில் *16.11.2023* அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மூத்த தோழர் என்.சங்கரய்யா அவர்களுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் இகக(மாலெ) விடுதலை கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில், இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, நிலைக் குழு உறுப்பினர்கள் தோழர் டி. சங்கரபாண்டியன், தோழர் இரணியப்பன், இகக(மாலெ) மத்திய கட்டுப்பாட்டு ஆணைய உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி, மாநிலக் குழு உறுப்பினர் தோழர் திருநாவுக்கரசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு செவ்வணக்கம் செலுத்தினர். சிபிஐஎம் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி, தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட சிபிஐஎம் கட்சித் தலைவர்களை சந்தித்து இகக(மாலெ) சார்பாக அஞ்சலியையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டனர். அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி நினைவஞ்சலி உரையாற்றினார்.

அவர் தனது உரையில், மகத்தான முதுபெரும் தோழர் சங்கரய்யா அவர்கள் தன்னுடைய இளமைக் காலத்திலே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகச் செயல்பட்டு, எட்டு ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்து, இந்தியா விடுதலை பெறுவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்பு சிறையில் இருந்து விடுதலை பெற்று, அதன் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி தடை



செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து இறுதி மூச்சு வரை இந்திய மக்களின் குறிப்பாக உழைக்கும் மக்களின் விடுதலைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தார் என்றும் அவரின் தியாக மரபை நாம் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினார்.

தோழர் சங்கரய்யா அவர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டங்களில், பேரணிகளில் இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர்கள் பாலசுந்தரம், பாலசுப்பிரமணியன், சந்திர மோகன் மற்றும் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள், மாநிலக்குழு உறுப்பினர் மற்றும் பல்வேறு மாவட்டங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ❑



# 2023ல் மோகன் பகவத்தின் விஜயதசமி உரை

**திபங்கர்**

ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டுக்கான சங்கிப் பெருந்தலைவரின் உரையுடன், ஆர்எஸ்எஸ் அந்த அமைப்பு தொடங்கப்பட்ட நாளாக விஜயதசமியை அனுசரிக்கிறது. மோடி அரசாங்கம் அமைந்த 2014–லிருந்து இந்தியாவில் ஆர்எஸ்எஸ் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முக்கியத்துவத்தையும் அதிகாரத் தையும் நிச்சயமாகவே பெற்றுள்ளது. மேலும் மோகன் பகவத்தின் விஜயதசமி உரையானது படிப்படியாக வெளிப்படுகிற சங்–பாஜக திட்டங்களின் மீது வெளிச்சத்தை பாய்ச்சுகிற முக்கிய உரைப் பகுதியாகப் பார்க்கப்படுகிறது. அடுத்த மக்க ளவைத் தேர்தலுக்கு முன்பு கடைசியாக வருகிற இந்த விஜயதசமியில் சங்கி பெருந்தலைவரின் இந்த ஆண்டுக் கான உரை முழுக்க முழுக்க மோடி அரசாங்கத்தின் உரத்த பரப்புரையை ஊதிப் பெரிதாக்கும் சங்கிகளின் தேர்தலுக்கான அழைப்பாக ஆனது.

எழுந்து வரும் உலக சக்தியாக, சங்–பாஜக பேச்சு வழக்கில் சொன்னால், இன்றைய பல்வகை நெருக் கடிகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கான தலைமை யேற்க உலகமே எதிர்நோக்குகின்ற விஸ்வகுருவாக இந்தியாவை பகவத் சித்தரிக்கிறார். ஜி20 டெல்லி உச்சிமாநாடு முதல் 100க்கும் மேற்பட்ட பதக்கங் களை இந்தியா பெற்ற சமீபத்திய ஆசிய விளையாட்டு போட்டி வரை அனைத்தும் இந்தப் போக்கிலான சுட்டியாக காட்சிப்படுத்தப் பட்டது. இந்தியாவை சீர்குலைக்கவும் சிதைக்கவும் அந்நிய சதி செயல் படுகிறது எனவும் அவர் கூறுகிறார். அத்தகைய அந்நிய சதியின் பற்றி யெரியும் உதாரணமாக மணிப்பூர் அவருக்குத் தெரிகிறது. இருப்பினும் மக்களை பெரும் துன்பத்திற்குள்ளாக்கிய, அவர்களுடைய வாழ்வைத் தகர்த்த மணிப்பூர் நெருப்பை அணைக்கும் பொறுப் பில் மோடி அரசாங்கத்தின் மாபெரும் தோல்வியை, ஒட்டு மொத்த துறப்பைக் குறித்து அவர் மவுனம் காக்கிறார்.

ஜி20 டெல்லி உச்சிமாநாடு முடிந்த உடனேயே கனடாவின் சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் படுகொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டியது. கனடாவுடன் விசாவுக்கான சேவைகளை நிறுத்தி இந்தியா எதிர்வினையாற்றிய போது மேற்கத்திய உலகம் முழுவதும் கனடாவின் பக்கம் நின்றது. மேலும் விசாரணையில் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என இந்தியாவைக் கேட்டுக் கொண்டது. காஸா மீதான இஸ்ரேலின் தற்போதைய இனப்படுகொலைப் போரில் அமெரிக்க இஸ்ரேலிய அச்சின் பக்கமாக நின்று, மனித நேயத்தின் அடிப் படையில் உடனடி போர் நிறுத்தத்திற்கான ஐநா தீர்மானத்திற்கு ஆதரவு வழங்க மறுத்ததன் மூலம், அரபு உலகம் மற்றும் உலகளாவிய பொதுக்கருத்திலிருந்து மோடி அரசாங்கம் இந்தியாவைத் தனிமைப்படுத்தியுள் ளது. ஆக, தற்போது இந்தியக் கடற்படையின் முன்னாள் படைவீரர்கள் எண்மர் இஸ்ரேலுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டில் கத்தார் நாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளார்கள். நரேந்திர மோடியின் உலக ளாவிய அந்தஸ்து எனப்படுவதைச் சுற்றி உருவாக்கப் படும் பரப்புரையில் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் துளை விழுந்து கொண்டிருக் கிறது.

அரசியல் எதிர்ப்பாளர்கள், தனித்தியங்கும் ஊடகங்கள், முற்போக்கு அறிவாளிகள் ஆகியோ ருக்கு எதிராக மோடி அரசாங்கத்தின் தீவிர பழிவாங்கலுக்கு ஒப்புதல் வழங்குகிற பகவத், உள்நாட்டு எதிர்கருத்துக் குரல்களை அந்நிய சதி எனக் கூறப்படுவதுடன் இணைக்கிறார். ஊடகவியலை தீவிரவாதத்துடன் இணைத்து, சீனாவிடம் நிதி பெற்றார்கள் என்ற பெயரில் நியூஸ்கிளிக் ஊடகவியலாளர்கள் மீதும், அரசுக்கு எதிரான சதி எனக் குற்றஞ்சாட்டி விவசாயிகள் இயக்கம் போன்ற ஆற்றல்மிக்க மக்கள் போராட்ட இயக்கங்கள் மீதும் மோடி அரசாங்கத்தின் தாக்குதலை நாம் ஏற்கனவே கண்டோம். மோடி அரசாங்கத்தின் நீண்டு கொண்டே போகும் உள்நாட்டு எதிரிகளின் பட்டியலில் கலாச்சார மார்க்சிஸ்ட்டுகள், விழிப்புற்றவர் குழுக்கள் என பகவத் மேலும் இரண்டு புதிய வகையினங்களை சேர்த்துள் ளார். அவர்கள் அறிவுசார் குழப்பத்தையும் சமூகத்தில் அராஜகத்தையும் பரப்புகிறார்கள் எனக் குற்றம் சாட்டுகிறார். கல்வித் துறையில் சுதந்தி ரத்தை முடக்க ஒவ்வொரு இந்திய நிறுவனத்தையும் கல்வி வளாகத் தையும் கட்டுப்படுத்தும் பதவிகளில் ஆர்எஸ்எஸ் தனது ஆட்களை அமர்த்துகிறது. மேலும் மக்களை பயங் கரத்தில் ஆழ்த்தவும் அவர்களது அந்தரங்க விருப்பத்தின் ஒவ்வொரு அம்சத்திலுமான வாழ்முறையை கட்டுப் படுத்தவும் தனது குண்டர் படையினரை கட்டவிழ்த்து விடுகிறது. இப்படியாக இந்திய நிறுவனங்களிலும் சமூகத்திலும் நிலவுகிற யதார்த்தத்தை மூடி மறைக்கவே இந்தப் பொய்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார, அரசியல், கலாச்சார மார்க்சிஸ்ட் டுகள் என மார்க்சிஸ்ட்டுகள் தங்களை நிச்சயமாக இந்த

பிரித்து வைத்துக் கொள்வதில்லை. மார்க்சிஸ்ட்டு களை இலக்காக்க சர்வதேச அளவில் 1920 லிருந்தே பாசிஸ்டு களும் இதர தீவிர வலதுசாரி சக்திகளும் 'கலாச்சார மார்க்சிஸ்ட்டுகள்' என்ற பதத்தை பயன்படுத்து கின்றனர். (இந்தக் காலகட்டத்தில் வலுவான யூத எதிர்ப்பு உணர்வுகளையும் இந்தப் பதம் உட்கொண்டுள்ளது). ஆக, முற்போக்கு கல்வியாளர்கள், எழுத்தாளர்களுக்கு எதிரான வேட்டையை தீவிரப்ப டுத்தவே பகவத் இந்தப் பதத்தை பயன்படுத்துகிறார். 1920 லிருந்தே மார்க்சை மறந்துவிட்டனர் என கலாச்சார மார்க்சிஸ்ட்டுகள் மீது பகவத் குற்றம் சாட்டுகிறார். அப்படியென்றால் அவர், 1848 இல் பதிப்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை, 1917 இன் வெற்றிகரமான ரஷ்யப் புரட்சி ஆகிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவற்றை உள்ளடக்கிய 1920 வரையிலான மார்க்சிய மரபை உயர்த்திப் பிடிப்பவரா?

'கலாச்சார தேசியவாதம்' என்ற பெயரில் சமூகத்தைப் பின்னோக்கி இழுக்கிற, கட்டுப் படுத்து கிற சங்கிகளின் முயற்சிகளுக்கு எதிராக எழுச்சி யுற்று, அதன் அந்த மாதிரிகளை தகர்க்கும் பன்முகத் தன்மை, நீதி, ஜனநாயக சக்திகள் மூலம் கலாச்சாரத் தளத்தில் அது எதிர்கொள்ளும் அதிகரித்த எதிர்ப்பை கண்டு ஒருவேளை ஆர்எஸ்எஸ் கவலை கொண்டிருக்கலாம்.

கலாச்சார மார்க்சிஸ்ட்டுகள் என்பதோடு சேர்த்து பகவத் பயன்படுத்திய மற்றொரு பதமான 'விழிப் புற்றவர்' அல்லது விழிப்புணர்வு பெற்றவர்கள் என்பது சமூக நீதிக்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடுகிற இடது, முற்போக்கு சக்திகளுக்கு எதிராக மிகச் சமீபத்தில் அமெரிக்க வலதுசாரிகள் பயன்படுத்துகிற பதமாகும். அமெரிக்காவில் இனவாதத் திற்கு எதிரான நீடித்த போராட்டத்தின் போது, விழிப்புணர்வு பெற்றவர்களாக இருப்பது அல்லது விழிப்புற்றவர் என்பது நேர்மறை பதமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவில் 'மதச்சார் பின்மை' என்ற பதத்தை சிதைத்த சங்பாஜக போன்று, டிரம்ப்பின் வெள்ளை மேலாதிக்க வாத ஆதரவாளர் கள் இதனை இழிவான பதமாக பயன்படுத்த தொடங்கினர். இந்தியாவில் சமூக நீதிக்கான வேட்கை வலுவாகிக் கொண்டிருக்கும் போது, பாலின நீதிக்காக அதிகரித்து வரும் அறுதியிடலும், மாற்று பாலின மக்கள் உள்ளிட்ட எல்ஜிபிட்டிகியு சமூகத்தினருக்கான சம உரிமை களும் சலுகை பெற்ற, பழமைவாத பிரிவினர் மத்தியில் எச்சரிக்கை மணியை ஒலிக்கின்றன. இருநூறு ஆண்டுகளுக்கு இட ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட உதாரணத்தைப் போல, இந்தப் பிரிவினர் மத்தியில் சில நேரங்களில் பகவத் அரசியல் காரிய சாத்தியவாதத்தை நுழைக்க முயற்சிக்கும் போது, உரையில் கலாச்சார மார்க்சிஸ்ட்டுகள், விழிப்புற்ற வர் குழுக்களை இலக்காக்குவதன் மூலம் சமூகப் பிற்போக்கு சக்திகளை தூண்டிவிட முயற்சிக்கிறார்.

அம்பேத்கர் குறித்த ஒரு புதிரான குறிப்பி னையும் தனது உரையில் பகவத் மேற்கொண்டிருந்தார். அரசியல் சாசன அவையில் அம்பேத்கர் ஆற்றிய உரைகளை வாசிக்குமாறு அவருடைய பார்வையாளர் களை அவர் கேட்டுக் கொண்டார். அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொள்வதற்கு சற்று முன்னதாக நிகழ்ந்த அம்பேத்கரின் இறுதி உரை, இந்திய அரசியல் சாசனத்தின் முன்னால் உள்ள சவால்கள் குறித்த மிகுந்த மதிநுட்பமான எச்சரிக்கை யாக இன்றும் உள்ளது. இங்குதான் அவர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்து வத்தை ஒருங்கிணைந்த முழுமையாக எடுத்துக் கொள்ளவேண்டும் எனவும், பெருகிவரும் சமூக, பொருளாதார சமத்துவ மின்மையின் முன்பாக வாக்குச் சீட்டில் சமத்துவம் அதன் அனைத்து அர்த்தத்தையும் இழந்து விடுவதைக் குறித்தும் எச்சரிக்கிறார். இந்த உரையில்தான் அரசியலில் பக்தி, அதாவது, தலைவர் களை வழிபடுவதும் ஆளுமை வழிபாட்டு முறையும், ஜனநாய கத்தின் சீரழிவுக்கும் இறுதியில் சர்வாதி காரத்தின் எழுச்சிக்கும் நிச்சயமான வழியாகும் என அடை யாளம் காண்கிறார்.

அரசியல் சாசன அவையில் அம்பேத்கரின் கடைசி உரையை பகவத் துணைக்கு அழைத்த தற்கான காரணங்கள் பற்றி நமக்கு இது வரையிலும் தெரியாது. அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, மனுஸ்மிரிதியின் பாரம்பரியத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமல் விட்டதற்காக ஆர்எஸ்எஸ் அதனை விமர்சிப்பதிலும் நிராகரிப்பதிலும் சுறுசுறுப் பாக இருந்ததை நாம் மறந்துவிடவில்லை. உண்மையில், நவீன இந்திய அரசியல் சாசனத்தின் வரை படத்தை வளர்த்தெடுப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, மனுஸ்மிரிதி அடிமைத்தனத்தின் சட்டம் எனவும் இந்திய ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அநீதி எனவும் அவர் பொதுவெளியில் வெளிப்படையாக அதனைத் தீயிட்டுக் கொளுத்தினார். அவருடைய அகால மரணத்திற்கு சில வாரங்களுக்கு முன்பாக அவருடைய ஐந்து லட்சம் தோழர்களுடன் புதிய வகை புத்த மதத்தை வெளிப்படையாகத் தழுவியதன் மூலம் ஒருவரின் மதத்தை தேர்ந்தெடுக்கும் அரசியல் சாசன உரிமையை அம்பேத்கர் பயன்படுத்தினார் என்பதையும் நாம் நினைவில் கொள்வோம். அந்த நிகழ்வு 1956 விஜய தசமியில் ஆர்எஸ்எஸ் தலைமையகமான நாக்பூரில் நடை பெற்றது. பகத்சிங் மற்றும் அம்பேத்கர் கனவு கண்ட இந்திய ஜனநாயகத்தை சங்கிகளின் பாசிசக் கனவுத் திட்டம் ஒருபோதும் நசுக்க முடியாது.

**தமிழாக்கம் – செந்தில்**

# இகக(மாலெ)விடுதலை – 11ஆவது காங்கிரஸ் ஆவணம்

# பொதுத் திட்டம்

– பகுதி 3 –

கடந்த இதழின் தொடர்ச்சி...

## இந்திய அரசு

இந்தியாவில் உள்ள அரசு, நிலப்பிரபுக் களோடும் குலக்குகளோடும் கூட்டணி வைத்துள்ள ஏகாதிபத்திய சார்பு பெருமுதலாளித்துவத்தால் தலைமை தாங்கப்படுகிறது. உலக மூலதனத்தோடு கூட்டு சேர்ந்து, இந்திய மூலதனம் தனது கடல் கடந்த நடவடிக்கைகளை விரிவுபடுத்தத் துவங்கியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகத் திட்டத்தில் ஒரு கேந்திரமான கூட்டாளி என்ற போதிலும், இந்திய அரசும் கூட அதிகரித்த அளவில் ஒரு பிராந்திய மேலாதிக்க சக்தியாக எழுந்து வருகிறது.

இந்திய அரசின் விவகாரங்கள் வெளிப் படையாக, ஓர் அரசியலமைப்புச் சட்ட நாடாளுமன்ற ஜனநாயக வரையறைக்குள்ளேயே நடத்தப் படுகிறது. இங்கு மக்களுக்கு, பல்வேறு மட்டங் களிலான தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சம்பிரதாய உரிமை உண்டு. இருப்பினும், இந்தியாவின் சட்ட, நீதிபரிபாலன, நிர்வாகத்துறை மேல் கட்டுமானமும் ஆயுதப் படைகளும் இப்போதும் பெருமளவுக்கு காலனிய பழங்காலத்தவையாகவே உள்ளன. அடிமைக் குடிகளை ஒடுக்கும், நிர்வகிக்கும் நோக்கத்திற்காக, ஓர் அந்நிய சக்தியால் வடிவமைக் கப்பட்ட இந்த மேல்கட்டுமானம், ஏகப்பெரும் பான்மை இந்திய மக்களுக்கு, அவர்களது அடிப்படை கண்ணியத்தையும், சுதந்திர குடிமக்கள் தகுதியை யும் மறுக்கிறது. ஆட்சியாளர்–குடிமக்கள் என்ற உறவுமுறை, காலனிய சகாப்த கலாச்சாரம் குடியுரிமை தொடர்பான நவீன ஜனநாயக கருத்தாக்கத்தின் மீது தொடர்ந்து செல்வாக்கு செலுத்திவரும் அதே வேளை, ஓர் இறுக்கமான படிநிலை சாதிய சமூகம், இனக்குழுக்களின், சமூகக் குடிகளின் ஆணாதிக்கக் கட்டளைகள், தனிநபர் சுதந்திரம், உரிமைகளின் அறுதியிடலை கடுமையாகச் சுருக்குகின்றன; சிறுமைப்படுத்து கின்றன. காலனிய காலத்துக்குப் பிந்தைய இந்திய ஆட்சிமுறையானது, கொடூரச் சட்டங்களைக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவது; சட்டத் துக்குப் புறம்பான நீதித் துறைக்குப் புறம்பான ஒடுக்குமுறை; காவல் சித்திரவதை, பாலியல் வன்முறை, படுகொலைகள்; போலி 'மோதல்கள்', விசாரணையின்றி காவல்; சிறுபான்மையினர், பழங்குடியினர், அரசியல் மாற்றுக் கருத்துடையோர் மீது பழி சுமத்தும் வேட்டை; வெகுமக்கள் எதிர்ப்பின் மீது காவல்துறையின் கொடூர ஒடுக்குமுறை; 'கலவரப் பகுதிகள்' என்று அழைக்கப்படுகிற பகுதிகளில், தண்டனை பற்றிய அச்சம் ஏதுமின்றி, ஒடுக்கு முறையில் ஈடுபடும் 'சிறப்பு அதிகாரங்கள்' கொண்ட ஆயுதப்படைகளின் இராணுவத் தலையீடு ஆகிய வற்றால் குறிக்கப்படுகிறது.

இந்தியா பல தேசிய இனங்கள், இன மொழிக் குழுக்கள் கொண்ட ஒரு நாடு. காலனிய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்கள், ஜனநாயகப் போராட்டங்கள் ஆகியவற்றின் ஊடே வளர்த்தெடுக்கப்பட்ட சில பத்தாண்டு கால ஒற்றுமையின் பின்புலம் கொண்ட, வளர்ந்துவரும் பொருளாதார கலாச்சார உறவாடல்கள், பரஸ்பர உள்வாங்குதல் ஆகியவை, நமது சமூகத்தின் பல்தேசியஇன வண்ணக் கலவைக்கு ஓர் ஒன்றுபட்ட இந்திய முகம் தந்திருக்கின்றன. ஆனால் மக்கள் ஒற்றுமையின் இந்தப் பரிணாம வளர்ச்சிப் போக்கு, அழுத்தமாகத் தெரிகிற மிகப்பெரும் அளவிலான நன்கு புலப்படும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளாலும், காஷ்மீரிலும் வடக்கிழக்கிலும், மிகவும் வெளிப்படையாக தெரிவது போன்று, பேரினவாத, அதீதமாக மய்யப்படுத்தப்பட்ட இந்திய அரசின் அப்பட்டமான பாகுபாடு, இடைவிடாத ஒடுக்குமுறை என்ற கொள்கையாலும் கூட்டாட்சி உரிமைகள், சுயாட்சி கோருகிற கோர்க்கர்களும், வேறுபலரும் தண்டிக்கப் படுவதாலும் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வெவ்வேறு தேசிய இனங்களும் தேசிய சிறுபான்மை

யினரும், வெவ்வேறு வடிவங்களிலான, வெவ்வேறு அளவுகளிலான சுயநிர்ணய உரிமைக்கான நீடித்த போராட்டங்களில் ஈடுபடுமாறு தள்ளப்பட்டுள்ளனர். இந்த விருப்பங்களையும், போராட்டங்களையும் மிருகத்தனமாக நசுக்குவதோடு அல்லாமல், பிரித்தாளும் தகிடுதத்தங்களைக் கையாள்வது, அரசு எதிர்ப்பு கிளர்ச்சிகளுக்கு எதிரான சூழ்ச்சிகள், குறுகிய இன, சகோதர மோதல்களைத் தூண்டுவது அப்பாவி குடிமக்கள் எப்போதும் ஓயாத வன்முறை, பாதுகாப்பின்மை என்ற சூழலில் தொடர்ந்து வாழ்ந்து வருவதையும் அரசு செய்து வருகிறது.

பார்ப்பனிய, புதிய பார்ப்பனிய கருத்தியல், கலாச்சாரத்தால் நெறிமுறையாக்கப்படும் சாதிய ஒடுக்குமுறையும், பாகுபாடும் இந்திய சமூகத்திலும் அரசிலும் நிலவுகிற மற்றுமொரு அருவருக்கத்தக்க அம்சமாகும். ஆகவே, சமூக ஒடுக்குமுறையை ஒழிப்பதும் சாதிகளை அழித்தொழிப்பதும் மற்றுமொரு முதன்மையான புரட்சிகர இலக்காகும். இந்திய அரசு, பெண்கள் சமத்துவம், பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பற்றி குழைய குழைய பேசிக்கொண்டே அனைத்துவிதமான ஆணாதிக்க கட்டமைப்புகளையும் சக்திகளையும் பாதுகாக்கிறது, முன்னெடுக்கிறது. மத அடிப்படை வாதம், மதவெறிவாதம், சாதியம், பாலின பாகுபாடு, இனரீதியாக தனிமைப்படுத்துதல், மொழி, பிராந்திய வெறி நிகழ்வுப்போக்குகள் ஆகியவை இந்திய ஆட்சி முறையின் வெவ்வேறு அடுக்குகளிலும் நிலவுகின்றன. இவை, கடந்துபோன நிலப் பிரபுத்துவ, காலனிய சகாப்தத்தின் வெறும் காட்சிப் பொருட்கள் அல்ல. 'நவீன' இந்தியாவின் மிகவும் பிரிக்க முடியாத பகுதிகளாக உள்ளன. இந்திய மக்களின் வளரும் ஜனநாயக ஒற்றுமையையும், விழிப்புணர்ச்சியையும் வலுவிழக்கச் செய்யவும், சீர்குலைக்கவும், ஆளும் வர்க்கங்களும் அவர்களது கட்சிகளும், இந்தக் கருவிகளை நன்கு கணக்கிட்ட விதத்தில் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்திய சமூகத்திலும், அரசியலிலும் உள்ளார்ந்துள்ள இந்த அனைத்து பலவீனங்களும், சிதைவுகளும் ஏறக்குறைய நூற்றாண்டு கால இந்து தேசிய மேலாதிக்கவாதத்தின் கருத்தியல், அரசியல் இயக்கத்திற்கு வழிவகுத்து, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றவும், நமது நாட்டை அப்பட்டமான ஒரு மதவெறி பாசிச அரசாக, கொடுங்கோல் இந்து தேசமாக மறுவரையறை செய்வதற்கு கடும் முயற்சி கொள்ள உதவியிருக்கின்றன. ஒரு சமூகத்திற்கு எதிராக மற்றொரு சமூகத்தை நிறுத்தியும், ஜனநாயக மாற்றுக் கருத்துகளுக்கு எதிராக, வெளிப்படையான கடும் நடவடிக்கைகளுடன் வெகு மக்களின் உணர்வுகளைத் தூண்டும் தேசியவாத கவர்ச்சிகர அரசியலை, சமூகப் பொறியமைவை இணைத்தும், அதிகாரத்தைப் பெறுதல், தக்கவைத்துக் கொள்ளுதல்; அரசுப் பாதுகாப்பின் கீழான சங்கிப் பயங்கரவாதத்தால் துணை செய்யப்படும் அரசு பயங்கரவாதம்; முன்னெப்போதும் கண்டிராத அளவிலான நிதி ஊழல், அரசியல் தீங்கும்; மாக்கியவல்லிய சட்ட, நிர்வாக சூழ்ச்சிகள்; கல்வியையும், கல்வித்துறையையும் காவிமயமாக்குதல்; வரலாற்றியல், அரசியல், கலாச்சாரம் ஆகியவற்றை மதவாதமாக்குதல்; கூட்டாட்சியை சிறுமைப்படுத்துவதற்கும், நாடாளுமன்றம், அனைத்து அரசியல் சாசன, அரை அரசியல் சாசன நிறுவனங்கள், நீதித்துறை மீதும்கூட நிர்வாகத்துறை மேலாதிக்கத்திற்கான வினோதப் பெருவிருப்பம் ஆகியவைதான் இன்று இந்திய அரசு செயல்படுவதை வரையறுத்துக் காட்டும் சில அம்சங்களாகும். சலுகைசார்ந்த நடவடிக்கைகள் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், அடையாளம் காட்டும் எண்கணித முறைமைகள், கொடிய உளவு(நிரல்கள்) மென்பொருள்கள், கெடுபிடியானத் தகவல் தொழில் நுட்ப விதிகள் ஆகியவற்றை ஆயுதங்களாகக் கொண்ட பெருந்தரவு முதலாளித்துவம், கண்காணிப்பு அரசு என்ற கொடிய இரட்டையர்களைத் தடையின்றி பயன்படுத்தி, ஒட்டுமொத்த நாட்டையும் மெய்யானதொரு சிறையாக மாற்றுவதற்கு இந்த அரசாட்சி முயற்சிக்கிறது. மொத்தத்தில், தற்போதைய ஆட்சிக்காலம், ஏற்கனவே பல பத்தாண்டுகளாக கடும் அரிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கட்டமைப்பை எப்பாடுபட்டாவது மேலும் தாழ்த்தி, அதனை, சட்டத்தின் ஆட்சி, அரசியல் சாசனத்தைக் கடைப்பிடிப்பது போன்ற ஜனநாயகத்தின் தொடக்க நிலைக் கூறுகளைக் கூட மறுக்கும், அதிகரித்து வரும் கொடுங்கோல் மற்றும் அப்பட்டமான ஒடுக்குமுறைப் பொறியமைவை மறைப்பதற்கான ஒரு ஏமாற்று மறைப்பாக ஆக்கியுள்ளது. எனவே இந்தக் கொடூர சதித்திட்டத்தை முறியடிப்பதும், புதிதாகக் கண்டடைந்துள்ள அதிகார நிலையில் இருந்து பாசிஸ்டுகளை அகற்றுவதும், இந்திய ஜனநாயகப் புரட்சியின் மிகமிக அவசரமான பணியாகும். ❑

# தலித்துகள் மீது முடிவின்றித் தொடரும் வன்கொடுமைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்!

அ.சந்திரமோகன்

தமிழ்நாட்டில், தலித்துகள் மீது நூற்றுக்கும் மேற்பட்ட வன்கொடுமைகள் நடந்துள்ளன. இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. மாதிரிக்குச் சில...

### புதுக்கோட்டை வேங்கைவயல்

2022ம் ஆண்டு டிசம்பரில், புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் கயவர்கள் மலம் கலந்தார்கள். குற்றவாளிகள் சாதியாதிக்க சக்திகள்தான் எனத் தெரிந்த போதும், தலித்துகளையே குற்றவாளிகள் ஆக்க முயற்சிக்கப் பட்டது. சிறப்பு புலனாய்வு, உயர்நீதிமன்ற புலனாய்வு எல்லாம் நடந்தும் குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப் படவில்லை.

### மதுரை காயாம்பட்டி

15.1.2023ல் மதுரை, ஒத்தக்கடை அருகில் உள்ள காயாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின இளைஞரான கண்ணனும் அவரது மனைவியும் பொங்கல் அன்று பக்கத்து ஊரில் இருந்த உறவினர் களைப் பார்க்க இரு சக்கர வாகனத்தில் சென்றுள் ளனர். அவர்களை வழிமறித்த அதே ஊரைச் சேர்ந்த ஆதிக்க சாதி இளைஞர்கள், "இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டுகிறாய்?" எனக் கேட்டு தாக்கியுள் ளனர். கண்ணன் அணிந்திருந்த ஆடைகளையும் அவிழ்த்துள்ளனர்; அவரது மனைவியின் சேலையைப் பிடித்து இழுத்துள்ளனர். இந்த விவகாரத்தைத் தட்டிக்கேட்ட பட்டியலின மக்கள் தங்களைத் தாக்க வந்ததாக ஆதிக்க சாதியினர் கொடுத்த புகாரில் 26 பேர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கண்ணன் கொடுத்தப் புகாரில், ஏழு பேர் மீது எஸ்.சி/ எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

### திருநெல்வேலி

### திசையன்விளை

திசையன்விளை, அப்புவிளையில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த முத்தையா, நாடார் சாதி பெண்ணைக் காதலித்தார் என்பதற்காக 23.7.2023 அன்று இரவு படுகொலை செய்யப்பட்டார். இது தமிழ்நாடு சட்டமன்றத்தின் சபாநாயகர் மாண்புமிகு அப்பாவு அவர்களின் தொகுதி. முத்தையாவின் தந்தை இது சாதியாதிக்கப்படுகொலைதான் என்று புகார் அளித்துள்ளார். முதலில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் அது வெறும் கொலை வழக்காக மாற்றப் பட்டு சம்பந்தமே இல்லாத பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மூன்று பேர் 25.7.2023 அன்று கைது செய்யப்பட்டு பின்னர் குண்டர் சட்டத்திலும் அடைக்கப்பட்டார்கள். குண்டர் தடுப்புக் காவல் ஆலோசனைக் குழுவினரால் ரத்து செய்யப்பட்டு, தற்போது அவர்கள் பிணையில் உள்ளார்கள்.

### நாங்குநேரி

தான் படிக்கும் பள்ளியில் தனக்கு இழைக்கப் படும் சாதியாதிக்கக் கொடுமை குறித்து புகார் அளித்ததற்காக நாங்குநேரியைச் சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த சின்னதுரை வீட்டிற்குள் புகுந்து ஆதிக்க சாதியைச் சேர்ந்த சகமாணவர்களால் கொலை வெறியுடன் வெட்டப்பட்டார். தடுக்க வந்த அவரது தங்கை சந்திரா செல்வியையும் வெட்டினார்கள். பள்ளிகளிலேயே சாதியாதிக்க நச்சு விதைக்கப்படு கிறது. தென்மாவட்டங்களில் குறிப்பாக திருநெல் வேலி பள்ளிகளில் சாதி அடையாள வண்ணக் கயிறுகளும் ரிப்பன்களும் மிகவும் பிரபலம்.

### சிவந்திப்பட்டி

பட்டியல் சமூக மாடசாமி தன் வேலை முடித்து வந்து கொண்டிருக்கிறார். அவரை இருவர் வழி மறித்து நீ எந்த ஊர்ல என்று கேட்க, அவர் நெத்தியம்பட்டி என்று சொன்னவுடன் அந்த சாதிப் பயலுக்கு இங்க என்ன வேலை என்று சொல்லி அடித்து உதைக்கிறார்கள். மாடசாமி சிவந்திப்பட்டி காவல் நிலையத்தில் நடந்ததை அப்படியே எழுதி புகார் அளிக்கிறார். புகாரை வாங்கிய பெண் காவல் ஆய்வாளர், எஸ்.சி.எஸ்.டி சட்டத்தில் வழக்குப் பதிவு செய்யாமல், வெறும் அடிபிடி என்பதாகவும் எதிரிகள்

யார் என்று தெரியவில்லை என்றும் எப்ஐஆர் போடுகிறார். இடதுசாரிக் கட்சிகள் மற்றும் ஜனநாயக அமைப்புகளின் போராட்டத்திற்குப் பின்னர் இப்போது எஸ்சி.எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தச்சநல்லூர்

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி தச்சநல் லூரை அடுத்த மணிமூர்த்தீஸ்வரம் அருகே 31.10.23 ல், பட்டியலினச் சமூகத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மனோஜ்குமார், மாரியப்பன் ஆகியோரை இடைநிலை சாதியாதிக்க பேர்வழிகள் சாதியைச் சொல்லித் திட்டி, அசிங்கமாகப் பேசி கொடூரமாகத் தாக்கியது மட்டுமல்லாமல், அவர்களை நிர்வாணப்படுத்தி அவர்கள் மீது சிறுநீர் கழித்து, மாலை முதல் நள்ளிரவு வரை ஆறு மணி நேரத்திற்கும் மேலாக அவர்களைச் சித்தரவதைக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கினர். அந்த சாதி வெறியர்கள் தலித் இளைஞர்களின் செல்போன்கள், டெபிட் கார்டுகள், நகைகள் மற்றும் 5000 ரூபாய் பணத்தை இ-வாலட் மூலம் கொள்ளையடித்தனர். ஆடைகளைப் பறித்துக் கொண்டனர். அவமானப்பட்ட இளைஞர்கள் இருவரும் நிர்வாணமாக இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்தே வீடு சென்று சேர்ந்துள்ளனர்.

## திருப்பணி கரிசல்குளம்

இடைநிலைச் சாதியைச் சேர்ந்த 18 வயது பூர்த்தியடையாத இளைஞர் பட்டியல் சாதியைச் சேர்ந்த சந்தியா தன்னை காதலிக்க மறுத்ததால், பட்டப்பகலில் அவர் வேலை பார்க்கும் குடோனி லேயே வெட்டிக் கொலை செய்தார். காவல்துறை இப்பிரச்சினையை அப் பையன் புத்தி சரியில்லாமல் செய்துவிட்டதுபோல் மாற்ற முயற்சித்தது மட்டு மின்றி, கம்யூனிஸ்ட் கட்சிகள் இதில் தலையிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு ஆதரவான தலித் அமைப்புகளிடம் வெளிப்படை யாகவே கூறியுள்ளது.

## சோக்கடி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சோக்கடி கிராமத்தில், கோயில் கட்டுமானப் பணியின் போது ஏற்பட்ட அசுத்தம் தொடர்பாக, 29.10.23ல் தலித்துகள் புகார் செய்ய, அதிமுக பிரமுகர்கள் தலைமையில் திரண்ட நூற்றுக்கணக்கான ஆதிக்க சாதி கும்பலால் கொடூரமாக தலித்துகள் தாக்கப் பட்டனர். ஒரு சிறு தகராறு காரணமாக தலித் வீடுகள் எரிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களைப் பாது காப்பதற்குப் பதிலாக, காவல்துறை சாதியாதிக்க சக்திகளின் பக்கம் நின்றது.

தென்காசி புளியங்குடியைச் சேர்ந்த தலித் தங்கசாமி பாளையங்கோட்டை சிறையில் மர்ம மரணம், தென்காசி தலித் போலீஸ்காரர் தினேஷ், ஆதிக்க சாதியினரால் தாக்குதல், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் அருந்ததியர் சமூக மக்கள் ஆண்டாண்டு காலமாக குடியிருக்கும் இடத்திற்கு பட்டா கேட்டு போராடினார்கள் என்பதற்காக அவர்களை சாதியாதிக்க மனோபாவத்துடன் தாக்கிய காவல்துறை 5 பொய் வழக்குகள் போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது. தூத்துக்குடி மாவட்டம் மணக்கரையில் 13.11.2023 அன்று பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மணி என்பவர் ஆதிக்க சாதியினரால் படுகொலை செய்யப்பட்டார். அன்றாடம் தலித்துகள் மீதான தாக்குதல்கள், வன்கொடுமை செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

## தலித் ஊராட்சித் தலைவர்களுக்கு எதிரான கொடுமைகள் நீடிக்கின்றன:

தமிழ்நாடு முழுவதும் உள்ள நூற்றுக்கும் கூடுதலான கிராமப் பஞ்சாயத்துகளில் (குறிப்பாக திண்டுக்கல், மயிலாடுதுறை, மதுரை, புதுக் கோட்டை, தேனி, கோயம்புத்தூர், திருவள்ளூர், விருதுநகர், சிவகங்கை, காஞ்சிபுரம், விழுப்புரம், ஈரோடு, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங் களில்) தலித் ஊராட்சி தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு தொடர்ந்து பிரச்னை நிலவுகிறது. அவர்கள் ஊராட்சி அலுவலகங்களில் நாற்காலியில் உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் உடல்ரீதியான தாக்குதல்களுக்கும் தீண்டாமைக்கும் உள்ளாகிறார்கள். தலித் பெண் ஊராட்சி தலைவர்கள் பாலின பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள். தலித் ஊராட்சித் தலைவர்கள் முடிவெடுப்பதற்கு பிற சாதி உதவித் தலைவர்கள் ஒத்துழைப்பதில்லை. அரசு அதிகாரிகளாலும் அவமதிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய பல்வேறு வன்கொடுமைகள் மீது ஏராளமான புகார்கள் கொடுக்கப்பட்டும், ஊடகங் களில் செய்திகள் மற்றும் அமைப்புகள் சார்பில் ஆய்வறிக்கைகள் வெளிவந்தும் வன்கொடுமை

களில் ஈடுபட்டவர்கள் மீது, வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்ததாகவோ, தண்டனைகள் வழங்கப்பட்டதா கவோ செய்திகள் இல்லை. இத்தகைய படுமோசமான நிலையை மாற்ற தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் எடுத்ததாகவும் தகவல்கள் இல்லை.

## திமுக அரசாங்கத்தின் பாராமுகத்தால்தான் இத்தகைய வன்கொடுமைகள் நடக்கிறதா?

கடந்த பத்தாண்டுகளாகவே, தமிழ்நாட்டில் தலித்துகள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஒருபுறம் பட்டியல் சாதிகள் மத்தியில் ஆர்எஸ்எஸ் – பாஜகவின் ஊடுருவல் நடைபெற்றது; அதிமுக ஆட்சிக் காலத்தில் சாதி யாதிக்க சக்திகள், அமைப்புகள் வலுப்பெற்றன. தலித் வெறுப்பு அரசியல் திட்டமிட்ட ரீதியில் கட்டமைக்கப்பட்டு, பொதுச் சமூகத்தில் சாதி மறுப்பு கருத்துகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முந்தைய வன்கொடுமை நிலைமையை என்சிஆர்பி 2021 அறிக்கை ( தேசிய குற்ற ஆவண மைய 2021 ம் ஆண்டுக்கான 'கிரைம் இன் இந்தியா'அறிக்கை) வெளிப்படுத்தியது. 29.8.2022ல் அறிக்கை வெளியானது.

'தமிழ்நாட்டில் தலித் மக்களுக்கு எதிராக 2019 ஆம் ஆண்டில் 1144 குற்றங்கள் நடந்துள்ளன. அது 2020ஆம் ஆண்டில் 1274 ஆக அதிகரித்தது. 2021இல் அது 1377 ஆக உயர்ந்திருக்கிறது. 2020ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 68 தலித்துகள் படுகொலை செய்யப் பட்டார்கள். அது தென்னிந்திய மாநிலங்களிலேயே மிக அதிகமாகும். 2021இல் 53 தலித்துகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 61 தலித்துகளைக் கொலை செய்ய முயற்சி நடந் துள்ளது.' என்றும் 'தலித் பெண்கள் பாலியல் வன்முறை செய்யப்படுவது தமிழ்நாட்டில் மிக அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 2020ஆம் ஆண்டில் 123 தலித் பெண்கள் பாலியல் வன்முறை செய்யப்பட்டதாக என்சிஆர்பி அறிக்கை தெரிவித் தது. அதில் 88 பேர் 18 வயதுக்கும் குறைவான சிறுமியர். தலித் சிறுமியர் களுக்கு எதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் இந்தியாவிலேயே 5ஆவது இடத்தில் தமிழ்நாடு இருந்தது. 2021ஆம் ஆண்டில் தலித் மக்களுக்கு எதிராக 66 கலவரங்கள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன. அவற்றில் 85 பேர் பாதிக்கப்பட்டனர்' என்றும் 'தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளை விசாரிப்பதில் தமிழ்நாடு காவல்துறை மெத்தனமாகவே உள்ளது. 2020இல் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்படாமல் இருந்த வன்கொடுமை வழக்குகள் 694. கடந்த 2021இல் பதிவு செய்யப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை 1377. மறு விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கு 2. இவை எல்லாவற்றையும் சேர்த்தால் மொத்தம் 2073 வன்கொடுமை வழக்குகள். அவற்றில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 825 வழக்குகள் விசாரணை செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது' எனவும் அறிக்கை கூறியது.

திமுக அரசாங்கம் மே, 2021 ல் ஆட்சி பொறுப் பேற்ற பின்னர் நடைபெற்ற குற்றங்களையும் உள்ளடக்கியது என்பதால், என்சிஆர்பி 2021 அறிக்கையை தீவிரமாக கணக்கில் எடுத்துக் கொண்டு, தலித்துகளை வன்கொடுமைக் குற்றங்களில் இருந்து காப்பதற்கும், குறைப்பதற்கும், அவசியமான வன் கொடுமைத் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டதாகத் தெரியவில்லை. மேலோட்டமான ஒரு சில நடவடிக்கை களே மேற்கொள்ளப்படுகின்றன. சமீபத்தில் திருநெல் வேலிக்கு வந்த அமைச்சர் தங்கம் தென்னரசு, வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சிலருக்கு அரசு வேலைக்கான உத்தரவை வழங்கினார்.

## தமிழ்நாடு காவல்துறையில் நிலவும் தலித் விரோத மனப்பான்மை:

திருநெல்வேலி மாவட்டம் பாளையங் கோட்டை வட்டம், சிவந்திப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பட்டியலினத்தைச் சேர்ந்த பரமானந்தம் தனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது நடவ டிக்கை எடுக்க வேண்டும் என திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்து, மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து, தமிழ் நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தில் பரமானந்தம் புகார் அளிக்க, அந்தப் புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அறிக்கை தாக்கல் செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 10.06. 2022ல் கடிதம் அனுப்பப்படுகிறது. பதில் இல்லை. தொடர்ந்து அறிக்கை தாக்கல் செய்யாமல் அறிக்கை அனுப்புவதை வேண்டுமென்றே தவிர்த்து வந்ததால்,

27.10.2022ல் சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் ஆணையத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்படுகிறது. அதுவும் கண்டு கொள்ளப்படவில்லை. மீண்டும் 30.11.2022 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் மாரிராஜன் என்ற மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறார். திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் இத்தகைய செயல், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் பற்றிய அவரது குற்றமய அலட்சிய மனோபாவத்தையே வெளிப்படுத்தியது. எனவே, மேற்படி மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளரைக் கைது செய்து, ஆணையத்தின் முன் 28.12.2022 அன்று ஆஜர்படுத்துமாறு பிடி ஆணை தென் மண்டல காவல் துறைத் தலைவருக்கும் அவருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை வசூல் செய்ய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக் கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேபோல், திசையன் விளை முத்தையா வழக்கிலும் எஸ்சி.எஸ்டி வன்கொடுமைச் சட்டத்தை நீக்கிவிட்டு குற்றவாளிகளை மாற்றி வெறும் கொலை வழக்காகப் பதிவு செய்ததில் திருநெல்வேலி மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு பெரும் பங்கு உள்ளது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

## தன்னாட்சி கொண்ட தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையச் செயல்பாடுகள்

2021ம் ஆண்டு மே மாதம் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பொறுப்பேற்றபின் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் 15.10.21இல் உருவாக்கப்பட்டது. மாநிலஅளவில் ஆதி திராவிடர்கள், பழங்குடியி னருக்கான சட்டபூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி சிவக்குமார் தலைமையில், ஒற்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் 7 உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டது. இது பலதரப்பிலும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்த ஆணையத்திடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனைகள், பரிந்துரைகள், நடவடிக்கைகள் பற்றிய விரிவான விவரங்கள் எதுவும் கண்கூடாகத் தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடி யினர் நல ஆணைய தலைவர் உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி சிவக்குமார் அவர்கள், 'காவல்துறை சாதிய மனப்பான்மை மிக்கதாக செயல்படுகிறது' எனவும், 'பட்டியல் சமூக மக்கள் காவல்துறையில் தரும் புகார்களுக்கு எதிர் புகார்களை குற்றவாளிகளிட மிருந்து பெற்று காவல்துறை பதிவு செய்யும் அளவுக்கு சீரழிந்திருக்கிறது' எனவும் பல்வேறு புள்ளிவிவரங்களுடன் அறிக்கை வெளியிட்டிருந் தார். தமிழ்நாடு அரசு இதன் மீது செயல்பட்டதாக எந்தவொரு தகவலும் இல்லை.

## சமூக நீதி கண்காணிப்பு குழுவின் வரம்புகளும் செயல்பாடும் !

“தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றில் சமூகநீதி எவ்வாறு செயல் படுகிறது” என்பதைக் கண்காணிக்க 23.10.2021ல் "சமூக நீதி கண்காணிப்பு குழு" ஒன்றும் அறிவிக்கப் பட்டது. பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இக் குழுவின் வரம்புகள், நோக்கங்கள், சமூகநீதி வரையறைகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுடன் சுருங்கிவிட்டது. “சமூகநீதி” பற்றிய திமுக அரசாங்கத்தின் குறுகிய பார்வையையும் அது சுட்டிக் காட்டியது.

சமூக நீதி கண்காணிப்புக் குழுவின் நோக்கங் களில், நிலம் உள்ளிட்ட பொருளாதார நீதி சார்ந்த அம்சங்கள் இல்லை; வன்கொடுமைகளைத் தடுப்ப தற்கு அரசு இயந்திரத்தின் கண்காணிப்பை உயர்த்து வதற்கு, பொதுச் சமூகத்தில் சமத்துவம் உருவாக்க வழிவகுக்கும் அணுகுமுறைகள் பற்றி எதுவும் இல்லை. மாறாக, திரு. சுப.வீரபாண்டியன் தலைமை யில் அறிவிக்கப்பட்ட இந்தக் குழுவில், சாதியாதிக்க மனப்பான்மையுடன் செயல்பட்டவர் எனச் சர்ச்சை களில் பெயர் பெற்ற ஐஏஎஸ் மேனாள் அதிகாரி திரு.கே.தனவேல் இடம் பெற்றிருந்தார்.

## ஆட்சியாளர்களுக்கு அரசியல் உறுதி வேண்டும்; வாக்கு அரசியல் கடந்த சமூக நீதிப்பார்வை வேண்டும்!

சமூகநீதிப் பாரம்பரியம் மிக்க தமிழ்நாட்டில் இன்றளவும், 'பொதுச் சமூகத்தில் சாதீயம் தலைவிரித் தாடுகிறது என்பதும் சட்டத்தின்படி செயல்பட வேண்டிய காவல்துறையில் சாதி ரீதியான பாரபட்சம் நிலவுகிறது' என்பதும் உண்மை தான்! ஆனால், தலித்துகள் மீது தொடரும் வன்கொடுமைகள் மீது

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாத தமிழ்நாடு அரசின் மெத்தனப் போக்கு அதிர்ச்சியளிக்கிறது.

தலித்துகள் மீது தொடரும் வன்கொடுமைகள் பற்றிய நீதி விசாரணை கமிஷன்களின் அறிக்கைகள் மற்றும் உண்மை அறியும் குழுக்களின் அறிக்கைகள் தமிழ்நாடு அரசிடம் உள்ளன; பொதுத் தளத்திலும் கிடைக்கின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் இனிமேலும், இதுபோன்ற காட்டுமிராண்டித் தனமான, கொடூரமான வன்முறைகளில் இருந்து தலித்துகளைக் காக்க, தடுப்பு மற்றும் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வன்கொடுமைப் புகார்கள் மற்றும் வழக்குகளில் சாதிய பாரபட்சம் கடைபிடிக்கும் காவல்துறையினர், நிர்வாகத் துறையினர் சட்டத்தின் படி, அரசுப் பணிகளில் தொடர்வதற்கு தகுதி யற்றவர் ஆவர்; தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவர். வாச்சாத்தி வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம் ஆட்சியர், கண்காணிப்பாளர், வன அலுவலர் உள்ளிட்டோரை தண்டிக்க உத்திர விட்டது குறிப்பிடத்தக்கது. தலித்துகள், பழங் குடிகள், பெண்கள் மீது நடத்தப்படும் வன்முறைக ளுக்கும் ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் பொறுப்பாக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

தலித்துகளுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப் பட்ட இத்தகைய வன்கொடுமை அட்டூழியங்கள், வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை மட்டுமல்ல, காலங்காலமாக பொதுப் புத்தியில் நிலவும் சாதிய மனப்பான்மை மட்டுமல்ல! 'அப்பட்டமான தலித் விரோத வெறுப்பு அரசியலின் விளைபொருள்' என்பதையும் நாட்டில் காவிப் பாசிசம் தலை விரித்தாடும் சூழலில் இது மேலும் அதிகரிக்கிறது என்பதையும் பதிவு செய்தாக வேண்டும். கல்வியறிவு மற்றும் உயர்கல்வியில் முன்னேறிய மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் இயல்பானதாக, ஒரு அரசியல் கலாச்சாரமாக மாறியுள்ளன. இதற்கு ஒரு அரசியல் ரீதியான பார்வையும், தீர்வும் அவசியமாகிறது. பொதுப் புத்தியில் நிலவுகிற சாதீய மனப்பான் மையை தகர்ப்பதற்கு இடதுசாரி மற்றும் முற்போக்கு இயக்கங்களின் காத்திரமான நடவடிக்கைகள் அவசியமாகிறது. பள்ளி, கல்லூரி பாடங்களில் சாதி ஒழிப்பு பாடத்திட்டங்கள் சேர்க்கப்படவேண்டும். காவல்துறை, வருவாய்த் துறை, ஆட்சித் துறைக ளிலும் சாதி ஒழிப்பு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். தவறு செய்பவர்கள் துறை ரீதியாகவும் சட்டரீதியாகவும் தண்டிக்கப்பட வேண்டும்.

தலைவர்கள் முதற் கொண்டு அனைத்தையும் சாதிய முறைக்குள் கொண்டுவரும் சாதிப் பெருமிதம் பேசும் அரசியல் அமைப்புகள், சமூக அமைப்புகள், சாதி காழ்ப்புணர்வுக்கும் அதனால் விளையும் பாகுபாடுகளுக்கும் காரணமாகும். இது தலித்துகள் மீதான வன்முறையாக வளர்கிறது.

கல்வி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அரசாங்க நிறுவனங்கள் இவற்றிலிருந்து "சாதியை விலக்கி வைக்கும் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மானுட உரிமைகளை உயர்த்திப் பிடிக்கும்" கருத்துப்பரவல் சமூகம் முழுவதும் விதைத்து வேரூன்றச் செய்ய வேண்டும். இவை, 'சமூகநீதிப் பெரியார், சமத்துவ அம்பேத்கர் விழுமியங்கள் பேசுகிற ஆட்சி' உடனடியாக செய்ய வேண்டிய அவசரப் பணிகளாகும்.

பொதுவாக, பல்வேறு வன்கொடுமை சம்பவங் களிலும் ஈடுபட்டவர்கள் அதிமுக, திமுக கட்சி யினராக உள்ளனர். ஒரு சிலவற்றில் சாதி கட்சிகள், சாதி அமைப்புகளும் இணைந்துள்ளன. "தலித்துகள் மீது வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!" என கட்சித் தலைமை கள் துணிவுடன் அறிவிக்க வேண்டும். இல்லை எனில், சமூக நீதி பற்றிய பேச்சுக்கள் அனைத்தும் வெற்று ஆரவாரங்களே என்பது அம்பலமாகும். மற்றொரு வகையில், இது தலித்துகளின் வாழ்வுரிமை பிரச்சினை என்பதாலும், திராவிட கட்சிகளுக்கு "சமூக நீதி" கோட்பாடு சார்ந்த விஷயம் என்பதாலும், அனைத்துக் கட்சி கூட்டம் உடனே கூட்டப்பட்டு தீர்வுக்கான வழிமுறைகள் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

அனைத்துக்கும் கூடுதலாக, தலித்துகள் மீது தொடரும் வன்கொடுமைகளை முடிவு கட்டுவதற்கு, வாக்கு அரசியல் கடந்த அரசியல் உறுதி ஆட்சியாளர் களிடம் தேவைப்படுகிறது. தமிழ் சமூகத்தின் கால் பங்கு மக்களுக்கு, அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள சமத்துவத்தையும், கண்ணியமான வாழ்க்கையையும் உறுதி செய்வது சமூக நீதி கொள்கை கொண்ட ஆட்சியாளர்களுக்கு முதல் கடமையாகும். ❑

# ஈபி, ஈடியின் அரசாட்சியும் இந்திய தேர்தல் ஜனநாயகத்தை மேலும் மேலும் கேலிக்கூத்தாக்குவதும்

மோடி அரசாங்கத்திற்கு ஈபியும் (தேர்தல் பத்திரங்கள்), ஈடியும் (அமலாக்க இயக்குனரகம்) அதிகாரத்திற்கான இரண்டு மிகப்பெரிய ஊற்றாக வெளிப்பட்டுள்ளன. ராஜஸ்தான், சட்டிஸ்கரில் தற்போது நடந்து கொண்டிருக்கும் தேர்தல்களில் உண்மையிலேயே ஈடிதான் பாஜகவிற்கான நட்சத்திர பரப்புரையாளராக மாறியுள்ளது. ஈடியின் இருத்தல் நீண்ட காலமாகவே உள்ளது. ஆனால் மோடி அரசாங்கம் என்ன செய்திருக்கிறதென்றால் தனது எதிர்ப்பாளர்களை இலக்காக்க அதனை ஆயுதமாக்கியிருக்கிறது. கார்ப்பரேட்டு களிடமிருந்து கட்டுப்பாடற்ற, கணக்கில் வராத நிதி பெறுதலை எளிதாக்க, தேர்தல் பத்திரங்களை மோடி அரசாங்கம் தான் உருவாக்கியது; அறிமுகப்படுத்தியது. தேர்தல்களில் முன்னெப்போதும் கண்டிராத அளவு பணத்தின் அதிகாரம் பயன்படுத்தப்படுவதற்கு இது வழி வகுத்துள்ளது. அதன்மூலம் தனது அனைத்து எதிர்ப்பாளர்களையும் வெற்றிகொள்ள மாபெரும் நல்வாய்ப்பை பாஜகவிற்கு வழங்கியுள்ளது. இருப்பினும் ஈபி, ஈடி என்னும் இந்த இரண்டு ஆயுதங்களும் மாறுபாடான வழிகளில் பயன் படுத்தப் படுகின்றன. ஈடியின் ஒவ்வொரு திடீர்ச் சோதனைகளும் கண்காட்சியாக்கப்படுகிற அதே வேளையில், ஈபியோ இரகசியமாக மூடி மறைக்கப் படுகிறது.

மோடியின் காலத்தில் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகிற ஈடியால், ஈடி என்பது அனைவரும் அறிந்த பெயராகிப் போனது. ஆயுதமயமாக்கப்பட்ட மத்திய நிறுவனங்களின் அவப்புகழ் பட்டியலில் தற்போது அது சிபிஐயையே ஒருவேளை தாண்டிச் சென்றிருக்கலாம். பிஎம்எல்ஏ அல்லது பணமோசடி தடுப்பு சட்டம், *2002*; எஃப்ஈஎம்ஏ அல்லது அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், *1999*; எஃப்ஈஓஏ அல்லது தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம், *2018* போன்ற நிதி குற்றங்கள் தொடர்பான சட்டங்கள் அமலாக்கப்படுவதை கண்காணிக்க சட்டப்பூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஈடி, தற்போது பாஜக அல்லாத கட்சித் தலைவர்களின் வீடுகளையும் அலுவலகங்களையும் திடீர் சோதனையிடுகிற செய்திகளில் தான் அடிபடுகிறது. பிணையில்லா பிரிவுகளின் கீழ் கைது செய்வதற்கும் குற்றம்சாட்டப்பட்டவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்வதற்கும் அசாதாரண அதிகாரங்களை ஈடி தற்போது பெற்றுள்ளது. மேலும் குற்றம் சாட்டப் பட்டவர்களிடமிருந்து அது பெறும் வாக்குமூலங்கள் ஏற்கத்தக்க ஆதாரங்களாகவும் கருதப்படுகின்றன!

இத்தகைய அசாதாரண அதிகாரங்களும் அளவுக்கு அதிகமான பயன்படுத்துதலும் இருந்த போதிலும், ஈடி வழக்குகளில் உண்மையிலேயே முன்னேற்றம் ஏற்படுகிற விகிதம் மிக மிகக் குறைவானதாகும். *2005* லிருந்து கிட்டத்தட்ட *6,000* வழக்குகளை ஈடி பதிவு செய்துள்ளது. ஆனால் *20* சதவீதத்திற்கும் குறைவான வழக்குகளில் மட்டுமே குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் *25* வழக்குகள் மட்டுமே முடிவுக்கு வந்துள்ளன. முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விதத்திலும் ஒரு தரப்புக்கு சார்பானதாகவுமே ஈடி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு முன்னாள் எதிர்கட்சித் தலைவர்களுக்கு எதிரான வழக்குகள் அவர்கள் பாஜகவில் இணைந்த பிறகு அல்லது என்டிஏ முகாமுக்குள் தஞ்சமடைந்த பிறகு கைவிடப்பட்டன. அசாமின் ஹிமாந்த பிஸ்வா சர்மா, மேற்கு வங்கத்தின் சுவேந்து அதிகாரி முதல் கர்நாடகாவின் பிஎஸ் எத்தியூரப்பா, மகாராஷ்டிராவின் நாராயண் ரானே, பவன காவாலி, யஸ்வந்த் மற்றும் யாமினி ஜாதவ், மிகச்சமீபத்தில் அஜித் பவார், ஜகன் பூஜ்பால் வரை பாஜகவால் ஈடி மூலம் கட்டுப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட அரசியல்வாதிகளின் பட்டியல் மிக நீண்டதாகவும் பன்முகப்பட்டதாகவும் உள்ளது.

ஈடியால் இலக்காக்கப்பட்டு துன்புறுத்தப்படும் எதிர்கட்சித் தலைவர்களின் பட்டியலும் நீண்டதாக, பன்முகப்பட்டதாக இருப்பதில் எந்தக் குறைவும் இல்லை. பல்வேறு தலைவர்கள் சிறையில் வாடுகின்றனர். மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த *2024* தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற வேளையில் பழிவாங்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு மேலும் சிலர் தற்போது இலக்காக்கப்படுகின்றனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகும் கூட, ராஜஸ்தானிலும் சத்தீஸ்கரிலும் கெடுநோக்குடைய திடீர் சோதனைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எதிர்கட்சிகள் மீது அவதூறு

களை வீசவும் ஊழலுக்கு எதிராக செயல்படுவதாக கூறிக்கொள்ளும் மோடி அரசாட்சிக்கு ஊக்கம் அளிக்கவும் சங்பாஜக பரப்புரை பொறியமைவு இந்தத் திடீர் சோதனைகளை பயன்படுத்தி கொள்ளும் வேளையில், ராஜஸ்தான் அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்புத் துறை இரண்டு ஈடி அதிகாரிகள் லஞ்சம் வாங்கிய போது கையும் களவுமாகப் பிடித்தது. சத்தீஸ்கரில் எந்தவொரு விசாரணையையும் மேற்கொள்வதற்கு முன்பாகவே, அரசாங்கத் தரப்பு சாட்சியாக மாறியவர்களின் சரிபார்க்கப்படாத தகவல் என்னென்ன அதற்கு கிடைத்ததோ அவற்றை வெளியிட்டதன் மூலம் தற்பொழுது பதவி வகிக்கும் காங்கிரஸ் முதலமைச்சருக்கு எதிராக அவதூறிழைக்கும் இயக்கத்தை மேற்கொள்வதில் ஈடி சுறுசுறுப்பாக செயல்படுகிறது. ஈடி, சிஆர்பிஎ∴ப் போன்ற மத்திய நிறுவனங்கள் பயன்படுத்தும் வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்புகளைத் தடுக்க முழுமையாக சோதனையிடப்பட வேண்டும் என சத்திஸ்கர் முதலமைச்சர் சரியாகவே கோரியுள்ளார்.

மோடி அரசாட்சியால் கொடிய முன்னணி தேர்தல் ஆயுதமாக ஈடி பயன்படுத்தப் படுகிறதென்றல், தேர்தல் பத்திரங்கள் பணத்தின் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள எவரும் அறிந்துகொள்ள இயலாத வழிமுறையாகும். கார்ப்பரேட் நன்கொடையாளர்களுக்கு முழுமையான அடையாள மறைப்பை உறுதி செய்ய, நிறுவனங்கள் சட்டம் முதல் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் வரை தொடர்ச்சியாக பல சட்டங்கள் திருத்தப்பட்டு இந்தப் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. யார் நன்கொடை வழங்கலாம் (அந்நிய சக்திகளும் ஷெல் நிறுவனங்களும் தற்போது சுதந்திரமாக இந்தியத் தேர்தல்களில் செல்வாக்கு செலுத்தலாம்), எவ்வளவு வழங்கலாம் (ஒரு நிறுவனம் வழங்கும் நண்கொடையின் அளவுக்கு எந்த வரம்பும் கிடையாது) என்பதற்கு எந்த கட்டுப்பாடுகளும் கிடையாது. இரகசியமாகவும் தண்டனையின்றியும் கருப்புப் பணத்தை வெள்ளையாக்க எளிதான, நிச்சயமான வழியாக இந்தத் தேர்தல் பத்திரங்கள் மாறியுள்ளன. ஈபி திட்டத்தின் அரசியல் சாசன செல்லுபடிக்கு சவால்விடும் மனு மீதான உச்ச நீதிமன்ற விசாரணையில் ஒரு கட்சியினுடைய தேர்தல் நிதியின் மூலத்தையும் தன்மையையும் அறிந்து கொள்ளும் எந்த உரிமையும் வாக்காளர் களுக்கு கிடையாது என்றும் கூட இந்த அரசாங்கம் சொன்னது.

இந்தியாவில் தொழில்துறைஅரசியல் பிணைப் புக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றி கொண்ட கார்ப்பரேட்டுகளுக்கும் மிகவும் வெட்கக்கேடான உதாரணம் இந்த தேர்தல் பத்திர முறை தான். அதன் தாக்கம், விளைவு குறித்து தீவிர அச்சத்தை வெளிப்படுத்திய, இந்திய ரிசர்வ் வங்கியும் தேர்தல் ஆணையமும் இந்தத் திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பை எழுப்பியுள்ளனர். இருப்பினும், மோடி அரசாங்கம் அனைத்து எதிர்ப்புகளையும் மீறி, இந்தியத் தேர்தல் முறைமையின் திட்டங்களிலேயே மிகவும் நேர்மை குன்றிய இத்திட்டத்தை திணித் துள்ளது. மோடி அரசாங்கத்தின் கைகளில் மய்யப்படுத்தப்பட்ட அதிகாரம், தேர்ந்தெடுக்கப் பட்ட சில கார்ப்பரேட்டுகளின் கைகளில் சாதனை யளவு செல்வமும் இலாபமீட்டும் வாய்ப்புகளும் குவிதல், அதற்குக் கைம்மாறாக பாஜகவிற்கு முற்றிலும் மறைவான செயல்முறையில், முழுவதும் மய்யப்படுத்தப்பட்ட அரசியல் நிதிகள் என்ற இந்த மும்முனை தாக்குதலின் கீழ் இந்தியத் தேர்தல் ஜனநாயகம் தடுமாறுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தை இப்படி அப்பட்டமாக கேலிக் கூத்தாக்கி, தேர்தல் முறைமையை மோசடியாக கையாளுவதன் அடிப்படையில் சங்கிப் படை யணியின் பாசிசத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. சில அரசியல் நோக்கர்கள் இதனை தேர்தல் எதேச்சதிகாரம் என்கின்றனர். இந்த முறைமையின் அச்சாணியாக ஈடிஈபி இணைப்பு செயல்படுகிறது. தேர்தல் பத்திரங்களின் மெய்யான நோக்கம், தன்மையை உச்ச நீதிமன்ற விசாரணை அம்பல மாக்கியுள்ளது. இதற்குப் பிறகும் இந்தப் பத்திரங்கள் அரசு நிர்வாகக் கொள்கையின் புனிதம் எனக் கூறி உச்ச நீதிமன்றம் இதனை தொடர விட்டு விடுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்! வர இருக்கிற தேர்தல்களில் மோடி அரசாட்சியை நிச்சயமான தோல்வியுறச் செய்தால் மட்டுமே ஈடிஈபியின் அரசாட்சியை மாற்றியமைக்க முடியும். அய்ந்து மாநில சட்டமன்றத் தேர்தல்கள் இந்தத் திசையில் பயணிப்பதற்காக வழி வகுக்க வேண்டும்.

**எம்எல் அப்டேட் 7–13 நவம்பர் 2023**
**தலையங்கம்**
**தமிழாக்கம் – செந்தில்**

# திண்ணைச் சில்லுகள்...

## நவம்பர் 14: குழந்தைகள் நாள்
## காஸாவில் மடிந்த குழந்தைகள் நினைவாக... துக்கம் என்பது ஒரு ஆற்றல்மிக்க உணர்ச்சி!

காஸா முற்றுகைக்குள்ளாகி இருக்கிறது. தீவிரமான நேருக்குநேர் தாக்குதலுக்குத் தயாராகி விட்டன இஸ்ரேலியப் படைகள். பாலஸ்தீனத்தின் மீதான இனப்படுகொலைப் போரில் மிகப்பெரும் பாதிப்படைந்தவர்கள் சின்னஞ்சிறு குழந்தைகள்தான். மருத்துவமனைகள் மீதும் அடுக்குமாடி வீடுகளின் மீதும் கண்மூடித்தனமாக வீசப்பட்ட குண்டுகள் காரணமாக பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியக் குழந்தைகள் உயிரிழந்திருக்கின்றனர். இடிபாடுகள் நிறைந்த வீதிகளில் அகதிகளாக வாழுமாறு தள்ளப்பட்டிருக்கின்றனர். குழந்தைகள் நாள் என்பது அவர்களை நினைவு கூர்வதற்காகவும் துக்கப்படுவதற்காகவும்தான். இஸ்ரேலுக்கு எதிரான சிறு எதிர்ப்பைக்கூட ஹமாஸ் ஆதரவு என முத்திரை குத்திட நம்மைச் சுற்றி சிலர் காத்துக் கொண்டிருக்கின்றனர். நாம் காஸா படுகொலைக்கு எதிரான எதிர்ப்பைக் கட்டமைப்பதோ, ஒரு பொது கருத்தரங்கை நடத்துவதோ பெரும் ஆபத்தான காரியமாகிவிடும். ஆனாலும், நாங்கள் துயரப்படுகிறோம். போர் நிறுத்தம் அறிவிக்கப்படாதா எனும் பயனில்லாத காத்திருப்பு, எதிர்பார்ப்பு; மேலும் அதிகமானோர் செத்துப்போனார்கள் எனும் செய்தி; பிணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக குவிந்து கொண்டிருப்பதை இன்னமும் நியாயப்படுத்துகிறார்களே என்கிற வருத்தம் இவையெல்லாம் வார்த்தைகளால் விவரிக்கப்பட முடியாத, அடிவயிற்றைப் பிசைகிற மாதிரியான, குடலைப் பிடுங்கி எடுப்பதைப் போன்ற ஒரு துக்கத்தை, துயரத்தை ஏற்படுத்துகின்றன. கோபத்தில் சத்தமாக கூக்குரலிட அச்சம் ஏற்படுகிறது. ஆனால், நாம் மவுனமாக துயரப்பட முடியும். துக்கம் என்பது ஒரு ஆற்றல்மிக்க உணர்ச்சி. இந்த வெட்கக்கேடான அவலத்திற்கு நமது கூட்டு துயரம் ஒரு பதிலாக அமையட்டும்! கடந்த ஒரு மாதத்தில் காஸாவில் மரணத்தைத் தழுவிய குழந்தைகளின் நினைவாக ஒரு மவுன விழிப்புணர்வுக்கு அறைகூவல் விடுக்கிறோம். மீண்டும் சிரித்திட இயலாத அந்த பிஞ்சுக் குழந்தைகளின் நினைவாக சில நிமிடம் மவுனம் காத்திட உங்களை அழைக்கிறோம்!

**– நீதிக்கான ஐஐடி பாம்பே**

## வறுமை ஒழிப்பு அல்ல; அயோத்தியாவிற்குப் புனித யாத்திரை

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் மத்திய பிரதேச மாநில தேர்தல் பிரச்சாரத்தின் போது, மாநிலத்தில் பிஜேபிக்கு அளிக்கும் வாக்கு மத்தியில் மோடி அரசுக்கு அளிக்கும் வாக்கு என்று பேசி இருக்கிறார். கடந்த தேர்தலில் பிஜேபியைத் தோற்கடித்தனர் மத்திய பிரதேச மாநில மக்கள். அப்போது மோடியை மத்திய பிரதேச மக்கள் நிராக்ரித்து விட்டார்கள், எனவே பதவி விலகு கிறோம் என சொல்லியிருக்க வேண்டும் அல்லவா, அமித் ஷா. மாறாக, எம்.எல்.ஏக்களை விலை கொடுத்து வாங்கி மாநில காங்கிரஸ் அரசையே கலைந்துபோக வைத்தது பிஜேபி. கர்நாடகாவிலும் மகாராஷ்ட்ராவிலும் கூட இதே போலத்தான் அரசுகளைக் கலைத்தது. அதை உணர்ந்த கர்நாடக மக்கள், பிஜேபியைத் தோற்கடித்து பிஜேபிக்கு நல்ல பாடம் புகட்டினார்கள். அதே பாடத்தை மத்திய பிரதேச மக்களும் பிஜேபிக்கு கற்றுக் கொடுக்க வேண்டும், பிஜேபி அரசைத் தோற்கடிக்க வேண்டும் என அறைகூவல் விடுக்கிறது சிபிஐஎம் எம்எல்.

அதே கூட்டத்தில், பிஜேபியின் ஒரு மாபெரும் தேர்தல் வாக்குறுதியை

வாக்காளர்களுக்கு அமித்ஷா நினைவுபடுத்தி இருக்கிறார். அதாவது, மக்கள் வாக்களித்து மாநிலத்தில் பிஜேபி அரசு அமைந்தால், மாநில மக்கள் அனைவரையும் அயோத்தியாவில் புதிதாக கட்டப்பட்டு, ஜனவரி 24ல் திறக்கப்பட விருக்கும் ராமர் கோவிலுக்கு புனித யாத்திரையாக அழைத்துச் செல்வோம் என்று கூறி இருக்கிறார். எவ்வளவு பெரிய வாக்குறுதி !

வேலை இல்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்கிறது பிஜேபி. அரசு வேலை என்றோ, தனியார் தொழிற்சாலை வேலை என்றோ நினைத்துவிட வேண்டாம். பக்கோடா செய்து விற்கும் வேலை கொடுக்கிறோம் என்கிறது பிஜேபி தேர்தல் அறிக்கை. இப்படி சொல்வது, கொஞ்சம் கூட கூச்ச நாச்சமில்லாமல் வாக்குறுதி கொடுப்பது பிஜேபியால் மட்டும்தான் முடியும்.

நாட்டில் வறுமையால் துன்புறும் மக்கள் அதிகமாக இருக்கும் 4வது மாநிலம், (பீகார், ஜார்க்கண்ட், உ.பிக்குப் பிறகு) மத்திய பிரதேசம். 2021ல் சுமார் 36.57 சதவீதமாக இருந்த ஏழைகள், இரண்டே ஆண்டில், 2023ல் 20.63 சதவீதமாக குறைந்து விட்டார்கள் என புளுகுமூட்டையை அவிழ்த்து விடுகிறது பிஜேபியும் அதன் நிதி ஆயோக் எனும் அமைப்பும். இரண்டே ஆண்டில் 1.36 கோடி ஏழைகள் வறுமைக்கோட்டுக்கு மேலே வந்துவிட்டார்கள் என்கிறது. அதற்குப் பொருள் வருமானம் அதிகமாகி விட்டது என்பதல்ல. மாறாக, வறுமையைக் கணக்கிடும் சூத்திரத்தை மாற்றி விட்டார்கள் என்பது மட்டும்தான். வறுமையை ஒழிப்போம் என சொல்லத் தயாராக இல்லை. அயோத்தியாவிற்குப் புனித யாத்திரை அழைத்துச் செல்கிறோம் என திருவாய் மலர்ந்திருக்கிறார், அமித்ஷா.

## கட்டுமான தொழிலாளர்கள் அடிமைகள் அல்ல; அவர்களை இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தைக் கைவிடு!

இஸ்ரேலிய கட்டுமான நிறுவன முதலாளிகள் சங்கம் இந்திய அரசோடு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதன்படி, இஸ்ரேலில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் பாலஸ்தீன கட்டுமானத் தொழிலாளர்களை வீட்டுக்கனுப்பி விட்டு, அவர்களின் இடத்தில் இந்திய தொழிலாளர்களை நியமித்து இந்தியர்களை கருங்காலி வேலை செய்யவைப்பது இஸ்ரேலின் திட்டம். இதற்குத் துணைபோகிறது இந்திய அரசாங்கம். சுமார் 90,000 இந்திய கட்டுமான தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப திட்டம் தீட்டி வருகிறது. இது ஒரு பேரழிவுத் திட்டம் ஆகும். சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வயிற்றிலடிப்பதற்கு நாம் காரணமாவது மிகப்பெரும் குரூர செயலாகும். பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கும் இனப்படுகொலைப் போருக்கு நாமும் துணைபோவது ஆகும். எனவே, இந்திய அரசு அந்த ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்; 90,000 கட்டுமான தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு விலங்குகள் போல், அடிமைகள் போல் ஏற்றுமதி செய்யும் திட்டத்தைக் கைவிட வேண்டும்; இஸ்ரேலியப் பொருட்களைப் புறக்கணிக்க வேண்டும்; துறைமுகங்களில் இஸ்ரேல் பொருட்கள் கையாள்வதை நிறுத்த வேண்டும் என அறைகூவல் விடுத்து போராட்டத்தில் குதித்திருக்கின்றன ஏஐசிசிடியுவும், இந்தியாவின் அனைத்துத் தொழிற்சங்கங்களும்.

## அம்பேத்கர் பெயரில் ஆர்எஸ்எஸ் மோசடி

ஆர்எஸ்எஸ் ''பெருந்தலைவர்'' மோகன் பகவத், 2023 அக்டோபர் 24 அன்று நாக்பூரில் நடைபெற்ற வருடாந்திர விஜயதசமி உரையில், ''ஆர்எஸ்எஸ் நிறுவனர் கே.பி.ஹெட்கேவாரை எப்படிப் படித்தீர்களோ அதைப் போலவே, அரசியலமைப்புச் சபையில் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய கடைசி இரண்டு உரைகளையும் அனைவரும் வாசிக்க வேண்டும்'' என்று தமது தொண்டர்களுக்கு வலியுறுத்தினார். 2014இல் பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்து, அம்பேத்கரை தனது கருத்தியல் சட்டகத்திற்குள் தீவிரமாக உள்ளிழுத்துக் கொள்ள ஆர்எஸ்எஸ் முயற்சிக் கிறது.

அம்பேத்கர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பரிந்துரைத்த போது, ஆர்எஸ்எஸும் அதன் ஆங்கில இதழான ஆர்கனைசரும் அவரையும் அவரது பணியையும் கடுமையாகத் தாக்கின. நவம்பர் 30, 1949 இல் ஆர்கனைசர் தலையங்கம், ''பாரதத்தின் புதிய அரசியல மைப்பின் மோசமான (விஷயம்) என்னவென்றால் அதில் பாரதியமாக எதுவும் இல்லை என்பது தான்... அதில் பண்டைய பாரதிய அரசியல மைப்புச் சட்டங்கள், நிறுவனங்கள், பெயரிடல் மற்றும் சொற்றொடரின் எந்த தடயமும் இல்லை என்பதுதான்...'' என்றது. ஆர்கனைசர் அதை மொத்தமாக நிராகரித்தது மட்டுமல்லாமல், தொன்மையான, மனுஸ்மிருதியை அரசிய லமைப்புச் சட்டமாக்க வேண்டும் எனவும் கோரியது. ''ஆனால் நமது அரசியலமைப்புச் சட்டத்தில், பண்டைய பாரதத்தின் தனித்துவமான அரசியலமைப்பு வளர்ச்சி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மனுவின் சட்டங்கள் ஸ்பார்டாவின் லைகர்கஸ் அல்லது பெர்சியாவின் சோலோனுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே எழுதப்பட்டன. இன்றுவரை, மனுஸ்மிருதியில் குறிப்பிடப்பட்டுள்ள அவரது சட்டங்கள் உலகம் மற்றும் உலகத்தின் போற்றுதலைத் கொண்டுள்ளது.ஞ் ஆனால் அரசியலமைப்பு எழுதிய பண்டிதர்களுக்கு இதில் எடுத்துக் கொள்ள ஒன்றுமில்லை'' என்று எழுதியது.

சுதந்திரம் அடைந்த பிறகும், ஆர்.எஸ்.எஸ்., இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தொடர்ச் சியாக இழிவுபடுத்திக் கொண்டே இருந்தது. எம்.எஸ்.கோல்வால்கர் முதல் இந்தியப் பிரதமர் உள்ளிட்ட தற்போதைய இந்துத்துவ ஆட்சியாளர் கள் வரை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை முழுவதுமாக நிராகரித்து வந்துள்ளனர்.

ஜனநாயக மதச்சார்பற்ற இந்திய அரசிய லமைப் பின் மீதான இந்த வெறுப்பு, 'இந்து ராஷ்டி ரத்தை வணங்கி, இந்து அரசை கட்டமைக்க உறுதி ஏற்கும்' ஆர்எஸ்எஸ்ஸின் சாகாக்களின் பிரார்த்தனைகளிலும் நிரம்பி வழிகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை காலில் போட்டு மிதித்துக் கொண்டே, மனுஸ்மிருதியை அரசியலமைப்புச் சட்டம் ஆக்க வேண்டும் என்ற விருப்பத்தை வலியுறுத்திக் கொண்டே, ''அரசிய லமைப்புச் சபையில் அம்பேத்கர் ஆற்றிய கடைசி இரண்டு உரைகளையும் அனைவரும் வாசிக்க வேண்டும்'' என்று மோகன் பகவத் பேசியிருப்பது, அரசியல் கயமைத் தனமேயன்றி வேறல்ல.


சந்தாதாரர் ஆகிடுவீர்!!

நன்கொடை தாரீர்!!!

மாதம் இருமுறை தனி இதழ் ரூ.10 : ஆண்டுச் சந்தா ரூ.200

## விவசாயிகளை ஏமாற்றும் மோடி அரசு!
## மோடி திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகள் மறுப்பு!!

பிரதம மந்திரி பாசல் பீமா யோஜனா என்றொரு திட்டம் உள்ளது. விவசாயிகளின் பயிர்களைக் காப்பீடு செய்து, பயிர் இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்குவது என்பதுதான் திட்டத்தின் சாரம். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 1.38 லட்சம் ஏக்கரில் நெல் நடவு முடிந்துள்ளது. ஆனால், 14, 616 ஏக்கர் பரப்பளவு மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளது. செய்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 5,266. ஆனால், கடந்த ஆண்டில் காப்பீடு செய்யப் பட்ட பரப்பு 3.5 லட்சம் ஏக்கர்!. 1.34 லட்சம் விவசாயிகள் காப்பீடு செய்து பணம் கட்டினர். ஏன் இந்த ஆண்டு விவசாயிகள் காப்பீடு செய்ய முன்வரவில்லை? காவிரி நீர் கிடைக்காத நிலை, பருவமழையின் தீவிரத்தில் சம்பா பயிர் அழியும் அபாயம் இருக்கும்போதும் ஏன் விவசாயிகள் காப்பீடு தொகை கட்டவில்லை? காப்பீடு கட்டணம் ஒன்றும் அதிகமில்லை. ஏக்கருக்கு வெறும் 542 ரூபாய்தான்.

மோடியின் திட்டத்தால் ஏக்கருக்கு 542 விவசாயியிடமிருந்து காப்பீடு செய்யும் தனியார் கம்பெனிக்கு கிடைப்பது உறுதி. ஆனால், விவசாயிக்கு இழப்பீடு தொகை கிடைப்பதில்லை. இதனை கடந்த ஆண்டு இழப்பீடு பெற்றவர்களின் எண்ணிக்கை காட்டுகிறது. அறிவிக்கை செய்யப்பட்ட 820க்கு மேற்பட்ட தஞ்சையின் கிராமங்களில் வெறும் 7 கிராமங்களின் விவசாயிகளுக்குத்தான் இழப்பீடு கிடைத்தது.

காப்பீட்டுக் கம்பெனிக்கு பணம்! விவசாயிக்கு அல்வா! என்பதுதான் மோடியின் காப்பீடு திட்டத்தின் பின்னுள்ள சதி என்பதை விவசாயிகள் புரிந்துகொண்டுள்ளனர்.

## உண்மையின் விதைகள் புரட்சியை வளர்க்கும்!

இப்படியான நிலை இந்தியாவிற்கு வரும் என்பது குறித்து நம்மை யாரும் முன்னெச்சரிக்கை செய்யவில்லையா? நிச்சயம் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறோம். மிகவும் தெள்ளத் தெளிவான எச்சரிக்கை குரல் ஒன்றைக் கேளுங்கள். இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைப்பது, ஏற்பது என்ற நிகழ்வுப் போக்கின்போது டாக்டர் அம்பேத்கார் திரும்பத் திரும்பச் சொன்ன அறிவூட்டும் கூற்றைக் கேளுங்கள். அரசியல் சட்டத்தை உருவாக்கிய அவையின் நிறைவு அமர்வின்போது முரண்பாடுகளின் புதிய கட்டத்திற்குள் நாம் நுழைகிறோம் என்று அவர் குறிப்பிட்டார். 'ஒரு வாக்கு, ஒரு மதிப்பு' என்ற கோட்பாட்டில் புதைந்திருக்கிற அரசியல் சமத்துவத்திற்கும் நமது சமூகத்தில் ஆழ வேர்விட்டுள்ள சமத்துவ மின்மைக்கும் இடையில் உள்ள முரண்பாடு, சாதிக்கட்டமைப்பினால் மறுபடியும் வலுப் பெறுகின்ற படிக்கட்டுபோன்ற சமூக சமத்துவ மின்மை, முதலாளித்துவத்தின் இயல்பான சமத்துவமின்மை என்ற கட்டத்துக்குள் நாம் நுழைகிறோம் என்று டாக்டர் அம்பேத்கார் எச்சரிக்கை செய்தார். அரசியல் சட்ட ஜனநாயகம் என்ற மேலாடைக்குள் புதைந்துள்ளள இந்தியாவின் ஜனநாயக விரோத சமூக மண் என்ற முரண்பாடு. தேசத்தைக் கட்டமைப்பது என்ற லட்சியத்திற்கும் சாதியத்தை அழித் தொழிக்காமல் உண்மையான தேச ஒருமைப்பாடு ஒருபோதும் சாத்தியமில்லை என்பதற்குமான முரண்பாடு. வலிய சண்டைக்குப் போகும் பெரும்பான்மைக்கும் ஓரங்கப்பட்ட சிறுபான் மைக்கும் உள்ள முரண்பாடு.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்தை நமக்கு அளித்திருந்தபோதும், அரசியல் சட்ட ஒழுக்கத்தின் அடிப்படையிலான புதிய அரசியல் நிர்வாகப் பண்பாடு நாம் வளர்த்தெடுக்க வேண்டும் என்று அம்பேத்கார் சொன்னார். அரசியல் சட்டத்தின் அடிப்படையிலான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கும் சாதியம், மதவெறி அரசியல், அவற்றுடன் மிகவும் சமத்துவமற்ற நிலை என்பதற்கும் இடையில் உள்ள முரண்பாடு குறித்து அவர் நமக்கு எச்சரித்தார். சமூக மண்ணை ஜனநாயகப் படுத்துவதன் மூலம் இந்த முரண்பாட்டைத் தீர்த்துவைக்க நக்சல்பாரி முயற்சித்தது. ஆனால், நாம் இன்று நம்முன்பு காண்பது இதற்கு நேர் எதிரானது.

– திபங்கர்

பொதுச் செயலாளர், இகக(மாலெ)

# வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் இயக்கத்தின் 3வது ஆண்டு: தொழிலாளர்கள் விவசாயிகள் சென்னையில் பெருந்திரள் அமர்வு

கார்ப்பரேட் ஆதரவு, காவிப் பாசிச மோடி அரசை வீழ்த்த, விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி, தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்திய தொழிலாளர் வர்க்கம் விவசாயிகள் சமூகம் நாடு முழுவதும் நவம்பர் 26,27, 28 மூன்று நாட்கள் மாநில தலைநகர்களில் உள்ள ஆளுநர் மாளிகைகளை முற்றுகை பெருந்திரள் அமர்வுப் போராட்டம் திட்டமிடப்பட்டது.

தமிழ்நாட்டிலும் நவம்பர் 26ல் சென்னை ஆளுநர் மாளிகை அருகிலுள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில், தமிழ்நாட்டின் விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளான ஐக்கிய விவசாயிகள் முன்னணி – எஸ்கேஎம் மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய பெருந்திரள் அமர்வு நடைபெற்றது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் அணி திரண்டனர்.

தொமுச தொழிற்சங்கத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சண்முகம், எஸ்கேஎம் மாநில ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

ஏஐசிசிடியு தேசியத் தலைவர் வீ.சங்கர், ஏஐகேம் மாநிலச் செயலாளர் அ.சந்திரமோகன், அனைத்து மையத் தொழிற்சங்கங்கள் மற்றும் எஸ்கேஎம்-ல் இணைந்துள்ள விவசாயிகள் சங்கங்கள், விதொச தலைவர்கள் குறிப்பாக, சிபிஐஎம்–ஏஐகேஎஸ் மாநிலத் தலைவர் பெ. சண்முகம், மாநிலச் செயலாளர் சாமி நடராஜன், சிபிஐ–ஏஐகேஎஸ் மாநில தலைவர் குணசேகரன், மாநில செயலாளர் பி.எஸ். மாசிலாமணி , ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் இரணியப்பன் மற்றும் அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்க துணைச் செயலாளர் இராஜசங்கர் ஆகியோரும் உரை யாற்றினர். ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் ஞானதேசிகன், மாநிலத் துணைத் தலைவர் அந்தோணிமுத்து, மாநிலச் செயலாளர்கள் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நவம்பர் 28 அன்று புதுச்சேரி மாநிலத்தில் நடைபெற்ற கவர்னர் மாளிகை முற்றுகைப் போராட் டத்தில் ஏஐசிசிடியு தேசியத் துணைத் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன், விஜயா உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.













## தமிழகத்தில் தொடரும் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்கள்–படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரி

## மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி

# நவம்பர் 30: மாநிலந்தழுவிய எதிர்ப்பு நாள்

தமிழ்நாட்டில் அதுவும் தென் மாவட்டங்களில் பட்டியலின மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. பல பட்டியலின மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். தென்காசி மாவட்டம் புளியங்குடி, திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை, நாங்குநேரி, தூத்துக்குடி மாவட்டம் மணக்கரை, மதுரை மாவட்டம் பெருங்குடி என தொடர்கிறது. நெல்லை மாநகரம், மணிமூர்த்தீஸ் வரத்தில் இரண்டு பட்டியலின இளைஞர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டு அவர்கள் மீது சிறு நீர் கழித்து அவமானப்படுத்தினார்கள் சாதியாதிக்க வெறியர்கள். அதேபோல் கோபிச் செட்டிப்பாளையத்தில் இரண்டு பட்டியலின இளைஞர்கள் அடித்து துன்புறுத்தப் பட்டு சீறுநீர் கழித்து அவமானப்படுத்தப் பட்டுள் ளார்கள். தொடர்ந்து தலித் மக்கள் தாக்கப்படுவதும் அவர்கள் குடியிருப்புகள் அடித்து நொறுக்கப் படுவதும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. குடி தண்ணீர்த் தொட்டியில் மலம் கலந்த வேங்கைவயல் குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

பட்டியலின மக்கள் மீதான இந்த சாதியாதிக்க வன்கொடுமைகளைக் கண்டித்தும் தமிழ்நாடு அரசு இவற்றைத் தடுத்து நிறுத்திட உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்த வன் கொடுமைகளைத் தடுக்கத் தவறிய, வன்கொடுமைகளுக்கு ஆதரவாகச் செயல்படும் காவல்துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்து உரிய தண்டனை வழங்கக் கோரியும் குறிப்பாக வேங்கை வயல் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரியும் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சயின் சார்பாக 2023 நவம்பர் 30 அன்று மாநிலந் தழுவிய எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டன.

30.11.2023 அன்று வேலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் சரோஜா தலைமை தாங்கினார். இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் வீ.சங்கர், மாநில நிலைக்குழு உறுப்பினர் சொ.இரணி


திருவள்ளூர்


மணப்பாறை


உளுந்தூர் பேட்டை



நாமக்கல்

யப்பன் கண்டன உரையாற்றினார்கள்.

நெல்லையில் காலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் மா.சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர் ஜி.ரமேஷ் மற்றும் தென்காசி மாவட்டச் செயலாளர் புதியவன் ஆகியோர் உரையாற்றினார். மாநிலக்குழு உறுப்பினர் கணேசன், ஏஐசிசிடியு மாநில செயற்குழு உறுப்பினர் வேல்முருகன் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் வளத்தான் தலைமை தாங்கினார். திரளானவர்கள் கலந்து கொண்ட இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர் பாலசுந்தரம், மாநிலக்குழு உறுப்பினர்கள் ரேவதி, ரெங்கசாமி, ஊராட்சித் தலைவர் ராஜாங்கம், மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

சென்னை தாம்பரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநகரச் செயலாளர் ஆபிரகாம் தலைமை தாங்கினார். இகக(மாலெ) மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, மாநிலக்குழு உறுப்பினர் அதியமான் உரையாற்றினார்.

சேலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமை தாங்கினார். மத்தியக்குழு உறுப்பினர் சந்திரமோகன் கண்டன உரையாற்றினார்.

திருவள்ளூர் ஊத்துக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சூர்யா மற்றும் சுந்தர் தலைமை தாங்கினார்கள். மாவட்டச் செயலாளர் அன்பு கண்டனயுரையாற்றினார்.

கோவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர் வெங்கடாச்சலம் உரையாற்றினார்.

தர்மபுரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். மத்தியக்குழு உறுப்பினர் அ.சந்திர மோகன், ஏஐசிசிடியு தலைவர் முருகன், ஆதி தமிழர் பேரவை மாவட்டத் தலைவர் ராஜ்குமார் கண்டன உரையாற்றினர்.

திருச்சி மணப்பாறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டக்குழு உறுப்பினர் இளையராஜா தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் தேசிகன், மாநிலக்குழு உறுப்பினர் ராஜ்குமார் உரையாற்றினர்.

கும்பகோணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநகரச் செயலாளர் மதியழகன் தலைமை தாங்கினார். தஞ்சை மாவட்டச் செயலாளர் கண்ணையன், மாநிலக்குழு உறுப்பினர்கள் தவச் செல்வன், மாசிலாமணி உரையாற்றினர்.

உளுந்தூர்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐகேம் மாவட்டச் செயலாளர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி, கடலூர் மாவட்டச் செயலாளர் ராஜசங்கர் உரையாற்றினர்.

குமரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் அந்தோணி முத்து தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர்கள் சுசீலா, கார்மல் கண்டன உரையாற்றினர்.


திருவண்ணாமலை






# ஆறு முதல் கடல் வரை பாலஸ்தீனம் விடுதலை பெற வேண்டும்!

இஸ்ரேலின் இன வெறியால் பாலஸ்தீனத்தில் குழந்தைகள், பெண்கள் என லட்சக்கணக்கானவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் என குறிவைத்து, திட்டமிட்டுத் தாக்கிக் கொண்டிருக்கிறது இஸ்ரேல். இது இஸ்ரேலின் அகண்ட இஸ்ரேல் நோக்கம் மட்டுமல்ல, இன அழிப்புச் செயல் ஆகும். இந்த இனவெறி உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில் அங்குள்ள அரசுகள் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேலின் இனவெறிக்கு எதிராகவும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் லட்சக்கணக்கில் மக்கள் கிளர்ச்சிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இஸ்ரேலிலும் கூட பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் இஸ்ரேலின் போர் வெறிக்கு எதிராகவும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்கிற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நவம்பர் 19 அன்று லண்டனில் ‘ஆறு முதல் கடல் வரை பாலஸ்தீனம் விடுதலை பெறும் ‘ என்ற பதாகையுடன் மிகப் பெரிய மக்கள் எழுச்சிப் பேரணி நடைபெற்றது. இதில் 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அதேபோல் அமெரிக்காவின் சிகாகோ நகரத்தில், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக மிகப் பெரிய பேரணியை மக்கள் நடத்தியுள்ளார்கள். ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பாலஸ்தீனக் கொடியுடன் மக்கள் தெருக்களில் இறங்கி போராட்டங்களை நடத்தி னார்கள். நடத்தி வருகிறார்கள். நவம்பர் 19 அன்று குஜராத்தின் அகமதாபாத்தில் நரேந்திரமோடி மைதானத்தில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான இறுதி கிரிக்கெட் போட்டி இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த ஜாண் என்பவர், பாலஸ்தீனக் கொடியை கையில் பிடித்துக் கொண்டு, ‘பாலஸ்தீனத்தை விடுதலை செய்’ என்கிற முழக்கத்துடனான ‘டி’சர்ட் அணிந்து கொண்டு அச்சமின்றி மைதானத்திற்குள் ஓடி வந்து வீராட் கோலியை கட்டியணைத்தார். இது பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக, இஸ்ரேலின் இனவெறிக்கு எதிராக




உலகெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து வருகிறார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டாக மட்டுமல்ல, இந்திய மோடி அரசு, பாலஸ்தீன ஆதரவு இந்திய நிலைப்பாட்டில் இருந்து இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டிற்கு மாறிச் சென்றதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவும் இருந்தது. அதுவும் இரண்டை என்ஜின்கள் பிரதமர் நரேந்திரமோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் மைதானத்திற்குள் இருக்கிறபோதே இது நடைபெற்றது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் அந்தக் கோப்பையைத் தூக்கிக் கொண்டு இந்தியா முழுவதும் பிரச்சாரம் செய்து அரசியல் ஆதாயம் தேட நினைத்த பாஜக சங்கிகளுக்கு ஆஸ்ரேலிய அணியின் வெற்றி அதிர்ச்சியை அளித்தது. விளையாட்டை விளையாட்டாகப் பார்க்காமல் அரசியலாக்கினார்கள். எதிர் அணிகள் வந்த போது ‘ஜெய் ஸ்ரீராம்’ எனக் கோஷம் போட்டார்கள் சங்கிகள். இந்தியா வெற்றி பெற நாடெங்கும் யாகங்கள் நடத்தினர். இன்னும் சொல்லப் போனால், இந்தியா வெற்றி பெறச் செய்ய இந்து மத வெறியை மக்கள் மனதில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். சங்கிகளின் அந்த மதவெறிச் சிந்தனை தான் இந்திய அரசை பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டிற்கு மாற்றியது. பகுத்தறிவுக்கெதிராக, மத வெறியை, இன வெறியைத் தூண்டி விடுபவர்களுக்கு பாடம் புகட்டும் விதமாகவும் அந்த நிகழ்வு இருந்தது. ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.12.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# தமிழக அரசே! தொடரும் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்களை, படுகொலைகளைத் தடுத்து நிறுத்து!! நவம்பர் 30: எதிர்ப்பு நாள்!




நெல்லை




வேலூர்




புதுக்கோட்டை




சேலம்




தாம்பரம்




கும்பகோணம்




தர்மபுரி

Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh